10

# ‘நாட்டைக் காக்கும் நிதி’ சேர்க்க தனியாருக்கு அங்கீகாரம் இல்லை

Registered as a News Paqer in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 126
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆனி 3 ரபி. ஆகிர் 12 புதன்கிழமை [17-6-70]

**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| 1 வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும். தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

## “பணம் கொடுத்து ஏமாருதீர்”
## பிரதமர் ஸ்ரீமா அறிவிப்பு

கோட்டை, செவ்வாய்

‘நாட்டைக்காக்கும் நிதி’ சேர்க்க தனிப்பட்டவர்களுக்கு அரசாங்கம் அங்கிகாரம் அளிக்கவில்லை. பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் மக்களைத் தேடிவரும் எவரிடமும் பணத்தைக் கொடுத்து ஏமாற வேண்டாம்’ என்று பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள விசேஷ செய்தியொன்றில் கேட்டுக்கொண்டுள்ளார்.

தாமாகவே முன்வந்து நாட்டைக் காக்கும் நிதிக்கு பணம் அனுப்புபவர்களிடமிருந்து மட்டுமே உதவி பெறவேண்டுமென மந்திரி சபை முடிவுசெய்ததாகப் பிரதமர் தெரிவித்தார்

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் தெரிவித்ததாவது:-

‘சில தணிப்பட்ட ஸ்தாபனங்களும் தனி நபர்களும் சொந்த நலனுக்காகப் பணம் சேகரிக்கும் நோக்கத்துடன் நாட்டைக்காக்கும் நிதி சேர்ப்பதாகக் கூறிப் பொதுமக்களிடம் பணம் சேகரித்து வருவதாக எனக்குப் பலத்த புகார் கிடைத்தபடியே இருக்கின்றன. இதனுல் அரசாங்கத்திற்கு அவமரியாதை ஏற்படுகிறது

இந்நிதிக்குப்பணம்சேகரிக்கத் தனியார் எவருக்கும் அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை. ஆதலால் இவர்களைக்கண்டு மக்கள் ஏமாறக்கூடாது. பணம் அனுப்ப விரும்புபவர்கள் திறைசேரி உதவிக்காரியதரிசிக்கு விலாசமிட்டு அனுப்பவேண்டும். இதற்கான பற்றுச்சீட்டை அவர் வழங்குவார்’

### கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளனர்

அனுராதபுரம். செவ்

அனுராதபுரம் டிப்போவிலுள்ள நூற்றுக்கும் அகதிமானஇ.போ.ச,ஊழியர்களுடன், பிரதேச அதிகாரி, உதவியாளர் ஆகியோர் தலைவரின் மறுஅறிவித்தல் கிடைக்கும் வரை கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளனர்,

### கடலில் கப்பல் எரிகிறது

லண்டன், ஜூன் 16

பிரிட்டிஷ் எண்ணெய்க் கப்பல் ஒன்றுசீனக்கடலில் தீப்பற்றி எதிந்துகொண்டிருக்கிறது. நேற்று மாலை ஏற்பட்ட திடீர் மின்னலினுல் கப்பலில் வெடிப்பு ஏற்பட்டதாகவும், இதனுல் கப்பலில் தீப்பற்றியதாகவும் பிரிட்டிஷ் அறிவித்தது.

கப்பலைச் சேர்ந்த ஊழியர்கள் விபத்தினின்றும் தப்பிவிட்டனர். கப்பல் தொடர்ந்து எர்ந்துகொண்டிருப்பதாக எமக்குக் கிடைத்த செய்திகள் கூறின.

# விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள்

## கடன் பெறுவதில் உள்ள சிரமங்களைப்போக்க ஏற்பாடு

கோட்டை, செவ்வாய்

உண்மையான விவசாயிகள் யார் என்பதைக் கண்டறிவதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்குவதற்கு விவசாய அமைச்சர் திரு. கொப்பகடுவ முடிவு செய்திருக்கிறுர்.

விவசாயக்கடன்களை விரைவாகப் பெற்றுக் கொள்வது போன்ற விஷயங்களுக்கு உபயோகமாக இருக்கும்வகையிலும் வேறு விவசாயப் பிரச்னை

காரியம் செய்து கொள்ள வேண்டியிருக்கும் துர்ப்பாக்கிய நிலைமையைப் போக்குவதற்கும் இந்தத்திட்டத்தின் மூலம் வசதியேற்படும் என்று விவசாய, காணி அமைச்சர் நம்புகிறுர்.

அமைச்சரின் இந்தத் தீர்மானத்தை செயல்படுத்தும் வகையில் நாட்டிலுள்ள விவசாயிகள் எண்ணிக்கை இப்பொழுது கணக்கெடுக்கப்பட விருக்கின்றன ஒவ்வொருவிவசாயியின் சொந்த

### கந்தரோடையில் ஆராய்ச்சி நடத்தும் அமெரிக்க குழு

யாழ்ப்பாணம், புதன்

இலங்கையில் பௌத்த காலத்திற்கு முந்தின சரித்திர ஆராய்ச்சியை, அமெரிக்காவிலிருந்து வந்துள்ள புதைபொருளாராய்ச்சிக்குழு கந்தரோடையில் ஆரம்பித்துள்ளது.

இக்குழுவில் பென்சில்வேனியாபல்கலைக்கழகத்தை சேர்ந்த டாக்டர் திருமதி விமலா பெக்லி, திரு. பிரவுன்லீ, திரு. மகருப் ஆகியோர் வந்துள்ளனர்

இக்குழு இலங்கையின் தொன்மைச் சரித்திரங்களை ஆராய்வதில் இறங்கியுள்ளது கந்தரோடையை தொடர்ந்து இக்குழுமற்றும் சில பகுதிகளில் ஆராய்ச்சி நடத்த விருக்கிறது.

யாழ்ப்பாணம் நூதனசாலை பாதுகாவலர் திரு. ஏ. கந்தையா. உதவிபாதுகாவலர் திரு. எம். பி. செல்வரத்தினம் இக்குழுவிற்கு உதவி செய்துவருகின்றுர்கள்.

### மக்கள் குழுவிடம் 1-ம் வகுப்பு பிரவேசம்

கோட்டை, புதன்

“பாடசாலைகளில்முதலாம் தர மாணவர் பிரவேசத்தைமக்கள் குழுக்களிடம் கையளிப்பதென கல்வி அமைச்சு முடிவுசெய்துள்ளது அடுத்தவருடம் முதல் இது அமுலுக்கு வரும்.

அதிபர் 2 ஆசிரியர்கள், கல்வி அதிகாரி, பொதுமக்கள்ஆகியோர் இத்தக்குழுவில் அங்கம் வகிப்பர். தற்போது கல்வி இலாகாவிடம் இருந்துவரும் மாணவர் பிரவேச [illegible] குழுவிடம் [illegible] மாற்கலாம் என அமைச்சு கருதுகிறது.

# கிளிநொச்சித் தொகுதியில் 2000 ஏக்கர் நிலத்தில் குடியேற்றத் திட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயக் கடன்களை விரைவாகப் பெற்றுக் கொள்வது போன்ற விஷயங்களுக்கு உபயோகமாக இருக்கும் வகையிலும் வேறு விவசாயப் பிரச்னைகளின் போது பயன்படுத்து முகமாகவும், உண்மையான விவசாயிகள் யார் என்பதைக் கண்டுபிடித்துக்கொள்வதற்கு என விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் கொடுக்கப்படலாம் என்று தெரிகின்றது.

வி. சாயிகளின் நலன்களைப் பாதுகாக்கவும் அதிகாரிகளுக்குப்பின் சென்று தலைகுனிந்து காரியம் செய்து கொள்ள வேண்டியிருக்கும் துர்ப்பாக்கிய நிலைமையைப் போக்குவதற்கும் இந்தத்திட்டத்தின் மூலம் வசதியேற்படும் என்று விவசாய, காணி அமைச்சர் நம்புகிறார்.

விவசாயி விவசாய அதிகாரிகளின் தயவை எதிர்பாராமல் கிராமவங்கிகள், மக்கள் வங்கிகிளைகள் போன்றவற்றிலிருந்து இலகுவில்கடன்கள் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் செய்யவும் மந்திரி முடிவுசெய்திருக்கிறார்.

இந்தவகையில் விவசாயிகள் தமது அறிமுக பத்திரங்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

அமைச்சரின் இந்தத் தீர்மானத்தை செயல்படுத்தும் வகையில் நாட்டிலுள்ள விவசாயிகள் எண்ணிக்கை இப்பொழுது கணக்கெடுக்கப்படவிருக்கின்றன ஒவ்வொருவிவசாயியின் சொந்த நிலத்தின் அளவு ஒவ்வொரு வருடமும் அவர் வேளாண்மைக்குப் பயன்படுத்தும் நிலத்தின் அளவு அந்த நிலத்தில் கிடைக்கும். சாகுபடியின் அளவு போன்ற விபரங்களை அமைச்சு சேகரித்து சம்பந்தப்பட்ட விவசாயிகள் வசிக்கும் பிரதேசத்தில் உள்ள கிராம வங்கிக்கும், மக்கள் வங்கிக்கும் சமர்ப்பிக்கவிருக்கின்றது. விவசாயி ஒருவருக்கு கடன் தேவைப்பட்டால் தம் பகுதியிலுள்ள மேற்படி வங்கியொன்றுக்குப் போய் அறிமுகப்பத்திரத்தைக் காட்டி தமக்கு வேண்டிய கடனைக் கேட்கலாம் அதன்பேரில் அந்த விவசாயி பற்றிய விபரங்களை உடன் தருவித்து பார்த்து அவருக்கு வேண்டிய கடனை கொடுப்பது இலகுவாக இருக்கும்.

...தக்குழுவில் அங்கம் வகிப்பர். தற்போது கல்வி இலாகாவிடம் இருந்துவரும் மாணவர் பிரவேசம் மக்கள் குழுக்களிடம் கையளிப்பதால் ...பமாக்கலாம் என அமைச்சு கருதுகிறது.

தோட்டப்பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் முன்னோடியாக, அதுபற்றி ஆராய ஒரு குழுநியமிக்கப்படவிருக்கிறது. தோட்டப்பகுதிகளில் உள்ள சுமார் 600க்கும் அதிகமான பாடசாலைகள் உள்ள நிலங்களையும் கட்டிடங்களையும் அரசாங்கத்துக்கு கையளிக்கும்படி சொந்தக்காரர்களை கல்வி அமைச்சர் கேட்கவிருக்கிறார்.

## சிவாஒயயசேகரா

கோட்டை, புதன்

திருமதி சிவாஒபயசேகரா எம். பி. சுகாதார அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

# குடியேற்றத் திட்டம்

## 125 ஏக்கர் நிலத்தில் வீடமைப்புத் திட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

கிளிநொச்சி தொகுதியில், சுமார் 2000 ஏக்கர் காட்டு நிலத்தில் புதிய குடியேற்ற திட்டமும். வீடமைப்புத் திட்டமும் அமைக்கப்படவிருக்கிறது. 300 ஏக்கர் நிலம் நடுத்தரவகுப்பினருக்கும், சாதாரணதர மக்களுக்கும் வழங்கப்படும். 125ஏக்கர் நிலத்தில் வீடமைப்பு திட்டம் அமைக்கப்படும்.

'கனகபுரம்' என்ற பெயரில் ஆரம்பிக்கப்படவிருக்கும் இப்புதிய குடியேற்ற திட்டத்தில் படித்தவாலிபர்களுக்கும், இடம் அளிக்கப்படும். கிளிநொச்சி பட்டனத்திற்கும், முறிகண்டிக்குமிடையில் அமைக்கப்படவிருக்கும் இத்திட்டத்தில், சகல வசதிகளும் அமைகப்படும்.

இத்திட்டத்தில் வீடமைப்பு இலாகா, 125 ஏக்கரில், நவீன மாடிக்கட்டிடங்களை அமைத்து. வீடில்லாதவர்களுக்கு, வீடுகள் வழங்கவிருக்கிறது.

இதற்குரிய காணிகளை, நில அளவைப்பகுதியினர் அளந்து பிரித்துவிட்டதாகவும் தெரியவருகிறது. பிரதான கண்டி-யாழ்ப்பாணம் வீதியில் நிறுவப்படும் இத்திட்டத்தில் கடைகளும், வார்த்தக நிலையங்களும், தொழிற்சாலைகளும் தபாற்கந்தோர், ஆஸ்பத்திரி. பாடசாலை. நெசவுநிலையங்கள் மற்றும் பல வசதிகள் செய்து கொடுக்கப்படுமெனத் தெரியவருகிறது. இப்புதிய திட்டத்திற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

விதை தானியங்களை பாதுகாத்து வைக்கும் ஒரு களஞ்சியமும், இக்குடியேற்றத் திட்டத்தில்அமைக்கப்படும். (கு வி ம)

## பூநகரி கார் சாரதி கொலை மற்றொருவரும் கைது

மட்டுவில், செவ்

பூநகரி காட்டில் கார் சாரதி சிதம்பரராஜா படுகொலை செய்யப்பட்டது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் ஏ வி. வீரசிங்கா என்பவரை கண்டி அளவத்தகொட பொலிசார் கைது செய்தனர்.

இவர் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப் பட்டதைத் தொடர்ந்து. மாஜிஸ்திரேட் சந்தேக நபரின் விரலடையாளங்களை பதிவு செய்யும் படியும் இம்மாதம் 28ம் திகதி வரையும் ரிமாண்டில் வைக்கும் படியும் உத்தரவிட்டார்.

இக்கொலை சம்பந்தமாக தேடப்பட்டுவரும் 3-வது சந்தேக நபர் இன்னும் பொலிஸ் வலையில் சிக்கவில்லை.

யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பகுதியைச் சேர்ந்த சார்ஜன்ட் தாமோதரம் பிள்ளையினால், கைது செய்யப்பட்ட சாவகச்சேரியைச் சேர்ந்த சின்னத்துரை கந்தசாமி கொடுத்த தகவலைத் தொடர்ந்து பூநகரி காட்டுக்குள் புதைக்கப்பட்டிருந்த உடைகள் கண்டு பிடிக்கப்பட்டன.

## விரைவில் மாத்தறைக்கு ஒரு தொழில் நுட்பக்கல்லூரி

கொழும்பு, செவ்.

கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்று விரைவில் மாத்தறையில் நிறுவப்படும் என கல்வியமைச்சின் உதவி அமைச்சர் துடாவை தெரிவித்துள்ளார்.

மாத்தறை ஆடசிமன்ற அங்கத்தவரான திரு துடாவை தனது தொகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் இதுகாலவரை இத்தொழில் நுட்ப கல்லூரி நிறுவ தாமதமேற்பட்டமைக்குக் காரணம் முன்னைய சேனநாயக்கா அரசாங்கத்துக்கு ஆதரவளித்த முதலாளித்துவ நிலக் கிழார்களின் எதிர்ப்பேயாகும். இவர்கள்தான்இக் கல்லூரி நிறுவப்படுவதற்கு முட்டுக்கட்டையாக இருந்தார்கள் எனக் குறிப்பிட்டார்.

— —

## கலை இலக்கிய பெருமன்றம்

யாழ்ப்பாணம், புதன்

கலை, இலக்கியம் பெருமன்றம் இம்மாதம் 18-ம் திகதி மாலை 5மணிக்கு யாழ்ப்பாணத்தில் டாக்டர் வாமதேவா தலைமையில் கூடி முக்கிய பிரச்னைகள் பற்றி ஆராயவிருக்கிறது. கலைஞர்கள், எழுத்தாளர்களை எதிர் நோக்கும் பிரச்னைகளை ஆராய்ந்து கலாச்சார மந்திரிக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பது குறித்து முக்கியமாகஆராயப்படுமென்று மன்றத்தின் செயலாளர் திரு. டொமினிக்ஜீவா தெரிவிக்கிறார். (கு வி ம)

வடக்கில்

# பிரயாணிகள் படும் கஷ்டத்தை மந்திரி நேரில் பார்க்க வேண்டும்

## பிரயாணிகள் சங்க உப-தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், புதன்

'பஸ் தொழிலாளர் கமிட்டிக்கு, பஸ் பிரயாணிகளின் கஷ்டங்கள் தெரியாது. ஆதலால் அக்கமிட்டி பிரயாணிகளின் கஷ்டங்களை தீர்க்கும் என எதிர் பார்க்க முடியாது. பிரயாணிகள் சங்கம் தான், இக்கஷ்டங்களைதீர்க்க முடியும்'.

தென் யாழ்ப்பாணம் பஸ் பிரயாணிகள் சங்க உப தலைவர் திரு ஏ கந்தையா நமது நிருபரிடம் மேற்கண்ட கூறினார்.

திரு. கந்தையா மேலும் கூறியதாவது: கோண்டாவில் பஸ்டிப்போ ஊழியர்கள் நிறுவியகமிட்டி போக்குவரத்து அபிவிருத்தி செய்யும் எனக் கூறப்படுகிறது. பிரயாணிகளின் கஷ்டத்தைப்பற்றி பஸ் ஊழியர்களுக்கு தெரியாது: ஆதலால் பிரயாணிகள் இடம் பெறாத அக்கமிட்டி, பிரயாணிகளின் கஷ்டத்தை எப்படி தீர்க்கப் போகிறது?

வடபகுதியின் பஸ் சேவை வரவர மோசமடைந்து வருகிறது. புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டபின், பஸ் சேவை சீராகும் எனப் பிரயாணிகள் கொண்ட நம்பிக்கை வீணாகி விட்டது. பஸ் தொழிலாளர்கள்தான் சுறுசுறுப்பாக காணப்படுகிறார்களே தவிர பஸ்சேவையில் சுறுசுறுப்பை காண முடியவில்லை.

15 நிமிடத்திற்கு ஒரு முறை ஓடவேண்டிய யாழ்ப்பாணம் கொடிகாமம் பஸ், 2மணிக்கு ஒரு தடவையும் ஓடவில்லை. காலை 7மணி முதல் 9மணிவரை, கொடிகாமம் யாழ்ப்பாணம் சேவை சீராக நடைபெறுவதில்லை. இதனால் உத்தியோகத்தர்கள், வியாபாரிகள், நோயாளிகள் தினமும் கஷ்டப் படுகின்றனர்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில்பிரயாணிகள் நீண்ட நேரம் கியூவில்நிற்கவேண்டியிருக்கிறது. பிரயாணிகள் நிலைமையை உடனுக்குடன் அறிந்துதேவையானஇடங்களுக்கு பஸ் விடவேண்டிய ஒழுங்கு எதுவும் இல்லை. இது பற்றி பல முறை மேலிடத்துக்கு முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.

போக்குவரத்து அமைச்சர் இவ் விடம் நேரில்வந்து பிரயாணிகள் படும் கஷ்டத்தை பார்க்க வேண்டும், அப்பொழுது தான் பிரயாணிகளின் கஷ்டம் தீரும்.

வடபகுதியில் பஸ் சேவை சீர்கேடு சம்பந்தமாக போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தனவையும், இலங்கை போக்குவரத்து சபை தலைவர் திரு. அனில் முனசிங்காவையும், விரைவில் சந்திக்கவிருக்கிறோம்.

— —

## பிரஜாவுரிமை

கோட்டை, செவ்

கிறீம -சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி இவ்வாண்டு மே மாதம் 31-ம் திகதிவரை 70, 879 பேருக்கு இந்தியப் பிரஜா உரிமை வழங்கப்பட்டுள்ளது

# அரசுக்கு உதவுவதில் வடபகுதி மக்கள் ஆர்வம்

யாழ்ப்பாணம், புதன்

நாட்டைக்காக்கும் நிதிக்கு வடபகுதியிலிருந்தும் பலர் நன்கொடை வழங்க முன் வந்துள்ளார்கள். வடபகுதியிலுள்ள சில தொழிற்சங்கங்கள் நன்கொடைவழங்குவதுபற்றி ஆலோசித்து வருகின்றன.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபரும் ஆசிரியர்களும் நாட்டைக்காக்கும் நிதிக்கு ஒரு நாள் சம்பளத்தை வழங்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இக்கல்லூரியில் அதிபர்உட்பட 51 ஆசிரியர்கள் கடமையாற்றுகிறார்கள். இதனைத் தொடர்ந்து மற்றும்பல கல்லூரி ஆசிரியர்கள் நன்கொடை வழங்குவது பற்றி ஆலோசனை செய்து வருகின்றனர்.

யாழ்ப்பாணம் விமான நிலையத்தைச் சேர்ந்தசுமார் 75 ஊழியர்கள் ஜூன்மாத சம்பளத்தில் 1 நாள் சம்பளத்தை நாட்டைக்காக்கும் நிதிக்கு வழங்க முன் வந்துள்ளனர்.

சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரிக்கு யாழ்ப்பாணம் விமானநிலைய ஊழியர்கள் இம்முடிவை அறிவித்துள்ளனர்.

இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநர்யகா நல்லாட்சி நடத்துவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக்வும் இவ்வூழியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே வடபகுதி பஸ் தொழிலாளர்கள் ஒருநாள் சம்பளத்தை வழங்குவதாக தெரிவித்துள்ளனர்.

## தமிழ்ச்சேனை இயக்கத்தை நீக்கிவிடவேண்டும்

### கருணாநிதி வேண்டுகோள்

சென்னை, ஜூன் 16

தமிழ்நாட்டில் தமிழ்ச்சேனை இயக்கத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும்படி தமிழக முதலமைச்சர் திரு. மு கருணாநிதி கேட்டுக்கொண்டிருக்கிறார்

1968-ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட தமிழ்ச்சேனை இயக்கம் தமிழ்நாட்டுக்கு அத்தியாவசிய மற்றதென்றும் கருணாநிதி மேலும் தெரிவித்தார்

தமிழ்ச்சேனை என்ற பெயரின் தொடரினால் அது வன்முறைச் செயல்களில் ஈடுபடுகிறதென்று கருதமுடியாதெனக் கூறிய முதலமைச்சர், தமிழ்ச் சேனையால் நாட்டுக்கு எதுவித நன்மையும் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் தெரிவித்தார்

— —

## மலேஷிய பிரதமர் பதவியிலிருந்து விலகுவார்

கோட்டை, செவ்.

மலேஷியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் தமது பதவியிலிருந்து விலகப்போவதாக அறிவித்துள்ளார். லண்டன் செல்லும் வழியில் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வந்திறங்கிய மலேஷியப் பிரதமர் பத்திரிகையாளர் மத்தியில் பேசினார்.

துங்கு அப்துல் ரஹ்மானை பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சார்பில் பொதுநிர்வாகம் உள்நாட்டமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா வரவேற்றார்

பிரதமர் பதவியிலிருந்து விரைவில் விலகப்போவதாகக் கூறிய மலேஷியப் பிரதமர், தாம் உலக முஸ்லீம் செயலகத்தில் கூடுதலாக ஈடுபட்டு இஸ்லாமிய இயக்கத்துக்கு உழைக்கப்போவதாகவும் சொன்னார்

## அ. இ. பண்டிதர் சங்கம்

உடுப்பிட்டி, செவ்.

அகில இலங்கைப் பண்டிதர்சங்கம் புனரமைப்புச் செய்யப்படவிருக்கின்றது. இதற்கான முயற்சிகளில் மேற்படிசங்கத் தலைவர் பண்டிதர் திரு. கு. க. வைரவனார் ஈடுபட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

யாழ். நகரில் பிரபலமான ஸ்தாபன மொன்றுக்கு ''கௌண்டர் கிளாக்'' ஒடுவர் தேவை. முன்னர் வர்த்தக ஸ்தாபனங்களில் வேலை செய்த நற்சாட்சிப்பத்திரங்கள் இணைத்து, ஆங்கில-தமிழ் அறிவுள்ளவர்கள் 22-6-70க்கு முன்னர் விளம்பர இல. 2150, மே/பா ''ஈழநாடு'', யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். (25—40 வயதுக்குட்பட்ட ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்) 2150

ஜி. சி. ஈ. (சாதாரணம், உயர்தரம்) வகுப்புகளுக்கு கணிதம், விஞ்ஞானம் சற்பிக்கத் தகுதி தராதரமுடைய ஆசிரியர்கள் விண்ணப்பிக்கவும் அதிபர், கல்வி நிலையம், 67, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 2148

### தவறிவிட்டது

14-ந் திகதி இரவு யாழ்ப்பாணம் - கீரிமலை பஸ்ஸில் எனது மணிபர்ஸ், பணம், கடிதம் முதலியவற்றுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். ரி. சிங்கராயர், இலங்கை வங்கி, புத்தளம். 2147

### வகுப்புகள்

சிறுப்பர் பரீட்சை வகுப்புகளுக்குப் பிரவேசங்கள் தற்போதிலிருந்தே ஏற்கப்படுகின்றன. எங்கள் பொதுப் பரீட்சைகளது பெறுபேறுகள் எப்பொழுதும் நன்ருகவேயுள்ளன. யுனைட்டெட் இன்ஸ்டிடியூட், நெல்லியடி, கரவெட்டி. 2146

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 12 அல்லது 16 போர் (Bore) ஒற்றைக்குழாய் துவக்கு லைசென்ஸ் உள்ளவர்களுக்கு விற்பனைக்குண்டு. 17, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 2149

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க


## கேள்விப் பத்திர அறிவித்தல்

தெல்லிப்பழை கிழக்கு பல. நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டிடம் அமைப்பதற்கான சேவை ஒப்பந்த காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 30-6-70-ந் திகதிக்குமுன் பதிவுத் தபால் மூலம் தலைவருக்கு அனுப்பப்படவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 25-6-70-ந் திகதி மாலை 4 மணிக்கு முன் எமது சங்க காரியாலயத்தில் ரூபா 25/- கட்டுப்பணமாகவும் ரூபா 15/- விண்ணப்பப் படிவமாகவும் செலுத்தி பெற்றுக் கொள்ளப்படவேண்டும். விண்ணப்பப் படிவத்தின் ரூபா 15/-ம் எக்காரணம் கொண்டும் திருப்பிக் கொடுபடமாட்டாது. வேண்டிய விபரங்களை எமது சங்க கந்தோரில் அறிந்து கொள்ளலாம் அல்லது சங்கத் தலைவரிடம் அறிந்து கொள்ளலாம்.

க. வேலாயுதம்,
தலைவர்,
தெ. கி. ப. நோ. கூ. ச.
தெல்லிப்பழை கிழக்கு
பல. நோ. கூ. ச.
தெல்லிப்பழை. 2314

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6 45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 41 மீ.

பகல் 12-00 தொழிலாகேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ அன்ட் 61 மீ.

மாலை4-25கல்விஒலிபரப்பு 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 நானையசந்ததி,

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 வயலினிசை, 6-15 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு, 7-45 ஐ. நா. சித்திரம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 பாட்டு


ராணி ஜெய்சங்கர்—கே.ஆர்.விஜயா
(யாழ்ப்பாணம்) நாகேஷ்—வி கே. ராமசாமி
தினசரி 3 காட்சிகள் நடித்த

பெண்ணை வாழ விடுங்கள்


# கோப்பாய்வட்டார தமிழ்தின விழாப் போட்டி முடிவுகள்

உரும்பராய், செவ்.

''தமிழ் வளரவேண்டுமாயின் மாணவரிடையே தமிழ்ப் பற்று ஏற்படவேண்டும். இவ்வித பற்றுதலை ஏற்படுத்த மாணவரிடையே கட்டுரைப் போட்டி, நாடகப்போட்டி முதலியன நடைபெறுதல் வேண்டும். தமிழ்த் தின விழாக்களினுல் தமிழ்மொழி வளரும் என்பதில் சந்தேகமேயில்லை''

கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளுக்கான தமிழ்த்தினவிழாப் பரிசளிப்பின்போது உரையாற்றிய கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வே. சண்முகநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற வ் விழாவைப் பண்டிதர் செ. துரைசிங்கம் ஆரம்பித்துவைத்தார். பண்டிதர் ச. பொன்னுத்துரையும் பேசினுர்.

தமிழ்த்தின விழாக்குழுச் செயலாளர் திரு அ. பஞ்சாட்சரம் நன்றிகூறியதையடுத்து வட்டாரக கல்வி அதிகாரி திரு. வே. சண்முகநாதன் வெற்றிபெற்றவர்களுக்குச் சான்றுப் பத்திரங்களை வழங்கினுர்.

போட்டி முடிவுகள் பின்வருமாறு:

உறுப்பெழுத்து 3 ம் 4-ம் வகுப்பு: க. நிர்மலா கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி தி. இரத்தினேஸ்வரி வளலாய் அ. மி பாடசாலை, சி. விமலா அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை.

சொல்வதெழுதல் 5-ம் 6-ம் வகுப்பு: ப. ஸ்ரீதேவன் ஆவரங்கால் நடராசராமலிங்கவித்தியாசாலை, தி வசந்தினி கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி. இ. கிருபாகரசூரியன் கோப்பாய் தெற்கு ரோ. க. பாடசாலை.

சொல்வதெழுதல் 7 ம் வகுப்பு: சு. விமலச்சந்திரன் அச்சுவேலி ஸ்ரேசன் பாடசாலை, சி. ஆசைரத்தினம் புத்தூர் ஸ்ரீ பஞ்ஞசீகவித்தியாலயம், க. தேவராசா புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்

கட்டுரை 7-ம் வகுப்பு: சி. ஞானலசினி அச்சுவேலி சென்தெரேசா பாடசாலை, சி. கிருபாமலர் வளலாய் அ. மி பாடசாலை, செ. செல்வரஞ்சன் அச்சுவேலி ஸ்ரேசன் பாடசாலை.

உரத்துவாசித்தல் 3-ம் 4-ம் வகுப்பு: கு. சுகந்தி உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை, ச, சங்கரசேய் அச்சுவேலி ஸ்ரேசன் பாடசாலை, க. ஜெயபா சிங்கம் வளலாய் அ. மி மலர் கோப்பாய் தெற்கு கந்தவேள் வித்தியாசாலை, க. சியாமளாதேவி நீர்வேலி சி. சி. பாடசாலை.

சொற்பொழிவு 7-ம் வகுப்பு: சு. சாந்தினி உரும்பராய் சைவத்தமிழ்வித்தியாசாலை, அ. மட்டினு அச்சுவேலி சென்திரேசா பாடசாலை, ம. திரேசா ஒட்டப்புலம் ரோ க பாடசாலை.

பா ஓதுதல் 3-ம் 4-ம் வகுப்பு: கி. ஜெசந்தா உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை, இ. மகேந்திரராசா, வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாசாலை, வி. ரூபவதி நீர்வேலி சி சி பாடசாலை.

பாஓதுதல் 5-ம் 6-ம் வகுப்பு: சு. வரலட்சுமி அச்சுவேலி சென்தெரேசா பாடசாலை, ஆ ஜெகசோதி புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம், சி. எத்வீசம்மா உரும்பராய் ரோ க பாடசாலை.

பாஓதுதல் 7-ம் வகுப்பு: பி, மரியராணி ஒட்டகப்புலம் ரோ க பாடசாலை, செ. செல்வஞானம் உரும்பராய் சைவத்தமிழ்வித்தியாசாலை, வே சந்திரபாபு உரும்பராய் ரோ க பாடசாலை.

நாடகம்: அச்சுவேலி சென்திரேசா பாடசாலை (தமயந்தி இரண்டாம் சுயம்வரம்), கிறிஸ்தவகல்லூரி கோப்பாய் (புத்திமான் பலவான்), ஸ்ரேசன் பாடசாலை அச்சுவேலி (சிலம்பு)

— —

பாடசாலை

## ஹாக்கிபோட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண பாடசாலை ஹாக்கி விளையாட்டுச் சங்கத்தினுல், பாடசாலைகளிடையே நடாத்தப்படும், ஹாக்கிச் சுற்றுப்போட்டி தற்போது, ஆரம்பமாகியுள்ளது. இந்தப் போட்டியில் முதல் ஆட்டத்தில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் போட்டியிட்டன.

மேற்படி இரு கல்லூரிகளுக்குமிடையில் நடைபெற்ற, இரு ஆட்டங்களிலும், முதல் பிரிவில் யாழ்ப்பாணக்கல்லூரி 1-0 கோல்களால் வெற்றி பெற்றது. இரண்டாவது பிரிவில், மகாஜனக் கல்லூரி 2-1 கோல்களால் வெற்றி பெற்றது.

மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு, திரு வி. ரி. கணேசலிங்கமும், திரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்பிட்டி:

## தமிழ்தின போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, செவ்.

உடுப்பிட்டி வட்டாரப் பாடசாலைகளின் தமிழ்த் தினப்போட்டி நெல்லியடி மத்தியமகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. எஸ். மகேஸ்வரஐயர் தலைமையில் போட்டிகள்நடைபெற்றன.

போட்டிகளில் வெற்றி ஈட்டியோர் விபரம் வருமாறு:-

(பிரதிபண்ணல் 3-ம் 4 ம் வகுப்பு) ஆ' கலைச்செல்வி, புலோலி ரோ. க. பாடசாலை; க. தங்கவேல், புலோலி மே. மி: க. ஜானகி, கரணவாய் தாமோதரவித்தியா சாலை; (சொல்வதெழுதல் - வகுப்பு 5-6) இ. யோககுமாரி நெல்லியடி மெ. மி, க வரதராணி வதிரிவடக்கு மெ. மி: க சிவதாம்பிகை புலோலி மேற்கு, (சொல்வதெழுதல் வகுப்பு-7) சி. குமாரகுலசிங்கம் கரவெட்டி மாணிக்கவாசகவித்., ந. சிவசோதி கரணவாய் தெற்குமணியகாரன் தோட்டம். க. சிவானந்தம் கட்டைவேலி ஞானசாரியார்' சி. உதயகுமாரி துன்னலை வடக்கு இந்து (கட்டுரை வகுப்பு-7) சு. தங்கேஸ்வரி நெல்லியடி மெ. மி. சி, சிவகாந்தன் மாணிக்கவாசகர் வித்யாசாலை, த. மனேதேவி உடுப்பிட்டி இந்துப் பாடசாலை.

பேச்சு (வகுப்பு 5-6) ப. ஞானசரஸ்வதி வதிரிதெற்கு ரோ க, சூரியகலாகம்பர்மலை அ பாடசாலை, பா. கலை ஞானசுந்தரம் மணியகாரன் தோட்டம்சைவப்பாடசாலை (வகுப்பு-7) செ. ரூபராணி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வ. நாகேஸ்வரநாயகி வட இந்து மகளிர், வி கரு றகரி வதிரி தெற்கு ரோ க

பாஓதல் (வகுப்பு 3-4) மு. சௌந்தரநாயகம்மாணிக்கவாசகர் வித்யாலயம், க மைதிலிவடஇந்துமகளிர் கோ. மங்கையர்மணி கட்டைவேலி ஞானசாரியார் (வகுப்பு 5-6) வ, திருச்செல்வம் யார்க்கரு விநாயகர், ஆன்ருஜிசபாபதி

பதிவு செய்யப்பட்ட

# தொழிற் சங்கங்களுக்கு இலவச தபால் சேவை

## ஆசிரியர் சங்கத்திற்கு வரும் பிரேரணை

யாழ்ப்பாணம். செவ்

பதிவுசெய்யப்பட்ட தொழிற் சங்கங்களுக்கு இலவச தபால்சேவை வசதிகள் அளிக்கப்படவேண்டும்.

வடமராட்சி ஆசிரியர் சங்கத்தின் 40-வது வருடாந்த பொதுக்கூட்டம் இம்மாதம் 22-ம் திகதி நடைபெறும்போது மேற்கண்ட பிரேரணை சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

இக் கூட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கும் மற்றும் பிரேரணைகள் வருமாறு:-

அனுபவம் பெற்றுள்ள பட்டதாரிஆசிரியர்கள்கல்வி டிப்புளோமா பரீட்சைக்கு வெளிமாணவர்களாக தோன்ற அனுமதிக்கவேண்டும்.

பல தகுதி கூடிய சிரேஷ்ட ஆசிரியர்கள், முதலாம் இரண்டாம்தர அதிபர் பதவிகளுக்குப் விசேட பதவிகளுக்கும் தெரிவு செய்யப்படாமல் சில தகுதிகுறைந்த கனிஷ்ட ஆசிரியர்கள், அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்டிருப்பதால், இந்நியமனங்களை கல்வி மந்திரி மறுபரிசீலனை செய்யவேண்டும்.

விளையாட்டு பயிற்சி ஆசிரியர்கள் சம்பள உயர்வு பெறுவதற்கு தகுதிகாண் பரீட்சையில் சேர்ச்சிபெற வேண்டுமென்ற நியதிகளுக்குட்படவேண்டும்.

இத்தீவிலுள்ள சகல ஆசிரியர்களும் அங்கம் வகிக்கும் ஓர் ஆசிரியர் தொழிற்சங்கம் நிறுவ ஆவன செய்ய வேண்டும்.

வருமான இலாகா ஆசிரியர்களின் சம்பளத்திலிருந்து எடுத்துவரும், வரிக்கழிவு முறையிலுள்ள குறைபாடுகளை நிவிர்த்திசெய்ய வேண்டும்.

வதிரி தெற்கு ரோ க, த. ஜெயராசாகட்டைவேலி ஞானசாரியார், (வகுப்பு-7) ந. சிவசோதி மணியகாரன் தோட்டம்சைவப்பாடசாலை மேரி மக்டலின் வதிரி தெற்கு ரோ க, பெமல்காதேவி மாணிக்கவாசகர் வித்யாசாலை கரவெட்டி

உரத்துவாசித்தல் (வகுப்பு 5-6) த. தமயந்தி வடஇந்து மகளிர், ம. கிரிசாந்தி உடுப்பிட்டி மகளிர், வே. பொன்னுத்துரை துன்னலை வடகுஇந்து, இ. ஈஸ்வரலிங்கம் உடுப்பிட்டி அ மி கல்லூரி (வயது 3-4) ம கோபாலன் வதிரிதெற்கு ரோ க, வி செல்வநாயகி கரணவாய் வேதாரணியேஸ்வர வித் சு. குகுதினியார்க்கரு விநாயகர்

நாடகம்:- கரணவாய் தெற்கு மணியகாரன்தோட்டம் சைவப்பாட சாலை, வடஇந்து மகளிர் கல்லூரி கம்பர்மலை அரசினர் பாடசாலை.

### விளையாட்டுப் போட்டி

வல்வெட்டித்துறை, செவ்.


வல்வை சிதம்பரக்கல்லூரி விளையாட்டுப்போட்டி இம்மாதம் 25-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

— —

### வருடாந்த கூட்டம்

திருக்கேதீச்சரம். செவ்

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையின வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 19-ம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.



சமீபத்தில் நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் பெண்மையின் ஆட்சியே மலரும் என்று திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் தலைமையிலான கூட்டுமுன்னணியினரின் அமோக வெற்றியை முற்கூட்டியே கணித்து வெளியிட்ட சோதிட கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை அவர்களுக்கு டாக்டர் க. சு. சித்திரவேல் அவர்கள் தலைமையில் திருமலை ஐயசுமனராமய விகாரையின் விகாராதிபதி வண பட்டகல்லே நாரததேரோ அவர்கள் பாராட்டுமடல் வழங்குகின்ருர்.



ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

ஜெய்சங்கர்—கே. ஆர். விஜயா
நாகேஷ்—வி. கே. ராமசாமி
நடித்த

# பெண்ணை வாழ விடுங்கள்

ரசிகப் பெருமக்கள் குடும்பத்துடன் சென்றுபார்க்க வேண்டிய ஒரு தமிழ்த்திரை விருந்து.

யாழ். வின்ஸர் வெண் திரையில்

இன்றுமுதல் ஆரம்பம்

ஜெய்சங்கர்—தேவிகா

நாகேஷ், சச்சு, மனோகர்

நடித்த

# தெய்வீக உறவு

(தினசரி 4 காட்சிகள்)


இப்பொழுது திரையிடப்படுகிறது

வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)

எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
நாகேஷ் ரெங்கராவ்

மற்றும் பலர் நடித்த




உரத்துவாசித்தல் 3-ம் 4-ம் வகுப்பு: கு. சுகந்தி உடும்பராய் சந்திரோதய வித்தியாசாலை, ச. சங்கரசேய் அச்சுவேலி ஸ்ரேசன் பாடசாலை, க. ஜெயபாசிங்கம் வளலாய் அ. மி. பாடசாலை.

உரத்துவாசித்தல் 5-ம் 6-ம் வகுப்பு: வே. சகுந்தலேஸ்வரி நீர்வேலி சி. சி. பாடசாலை, சு. ஸ்ரீதரன் வளலாய் அ. மி. பாடசாலை, க. குகநேசன், ஆவரங்கால் நடராசராமலிங்க வித்தியாசாலை.

சொற்பொழிவு 5-ம் 6-ம் வகுப்பு: ந. புவனேந்திரன் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை, வ. செல்வ

## வெஸ்லிசினிமா

மணிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
பி. எஸ். வீரப்பா — ஜானகி
நடித்த

# சவுக்கடி சந்திரகாந்தா

## ஸ்ரீ காலிங்கன்

இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
நாகேஷ் - ராஜ்ஸ்ரீ
நடித்த

# அனுபவிராஜா அனுபவி

## ராஜா (யாழ்ப்பாணம்)

Daily 3 Shows
Poya, Pre-poya 4 Shows
Manoj Kumar
Waheeda Rehman
in
PATHAR KE SANAM
(Eastman color-Hindi)

## MANOHARA
JAFFNA

Daily 4-45, 7&9-45 p. m.
Poya-Pre. Poya 10.30 a.m.
Sandy Dennis, Keiro Dul ea
in
THE FOX
Symbol of the male
(Adults only-color)
கட்டாயமாக
வயதுவந்தவர்களுக்கு
மட்டும்

## REGAL JAFFNA

Daily 4 Shows
Jim Brown
Raquel Welch
in
100 RIFLES
(Adults only)

இரண்டாவது பிரிவில், மகாஜனக் கல்லூரி 2-1 கோல்களால் வெற்றி பெற்றது.

மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு, திரு வி. ரி. கணேசலிங்கமும், திரு. சோமசுந்தரமும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கும், சிதம்பராக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 'பி' பிரிவு ஹாக்கிப்போட்டியில், அருணோதயாக் கல்லூரி 1-0 கோல்களால் வெற்றி பெற்றது.

அருணோதயாக் கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு கே. பூபால், திரு. நாகமணி ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

(தே. நி)

## "கரம்" சாம்பியன்

யாழ்ப்பாணம், புதன்

பரந்தன் ரசாயன கூட்டுஸ்தாபன விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட "கரம்" விளையாட்டுச் சுற்றுப் போட்டியின், இறுதியாட்டத்தில் பங்கு பற்றிய ஏ. பென்னடிற், ரட்ணசிங்கம் ஆகிய இருவரும், சிவலிங்கம், தர்மநாயகம் ஆகியோரை 29-8 புள்ளிகள் வித்தியாசத்தால் தோற்கடித்து சாம்பியனானார்கள்.

(தே. நி)

## 'மென்பந்துச்' சாம்பியன்

யாழ்ப்பாணம், புதன்


கிளிநொச்சி விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வந்த, மென்பந்துச் சுற்றுப் போட்டியின், இறுதியாட்டத்தில் ஆரோகணம் விளையாட்டுக் கழகமும், உப்புக் கூட்டுஸ்தாபனக் கோஷ்டியும் பங்கு பற்றின. இந்த ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த போதிலும், உப்புக் கூட்டுஸ்தாபனக் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் முதலான ஓட்டங்களைப் பெற்றமையால் இக்கோஷ்டிக்கே சாம்பியன் பழுசு வழங்கப்பட்டது.

(தே. நி)


## மீண்டும் விசாரிக்கப்படலாம்

விஸ்வமடு, செவ்

விஸ்வமடு விவசாயப்படை முகாமியில் நடந்த சீமெந்துச்சாலை தீவிபத்துச் சம்பந்தமான வழக்கை புதிய அரசாங்கம் திரும்ப விசாரிக்க இருப்பதாக அறியப்படுகிறது.



# உங்கள் வெங்காயம் மிளகாய்த் தாவரங்களைத் தாக்கும் களைகளைக் கட்டுப்படுத்த செலவு என்னவாகிறது?




'பிளனவின்' பாவிப்பின் ஏக்கருக்குச் செலவு ரூ. 50/- மட்டுமே! ஏனைய களைக் கொல்லிகள் பாவனைச் செலவில் அரைவாசி இது.

'பிளனவின்' ஓர் புதிய களைக் கொல்லி. சகல களைகளையும் கட்டுப்படுத்துவது மட்டுமல்ல விளைச்சலையும் பெருக்க வல்லது. விசேஷமாக வெங்காயம், மிளகாய் மற்றும் சிறுதுணை உணவுத்தாவரங்களைத் தாக்கும் களைக் கட்டுப்பாட்டிற்கும் சிறந்தது.

**உங்கள் செலவை அரை மடங்காக்கி இலாபத்தை இருமடங்காக்க 'பிளனவின்' பாவியுங்கள்!**

**லங்கெம் இலங்கை லிமிட்டெட்**
சிலிங்கோ கட்டிடம் த. பெ. 919 கொழும்பு.
டெலிபோன்: 28333

இரசாயனங்களை நினையுங்கள். லங்கெமை நினையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிராஸில் நாட்டில்
# பயங்கரவாதிகளின் கோரிக்கைப்படி 40 சிறைக் கைதிகளும் விடுதலை
## மேற்கு ஜெர்மன் தூதுவர் உயிர் தப்புவாரா?

அல்ஜியர்ஸ், ஜூன் 16

கடத்திச் செல்லப்பட்ட மேற்கு ஜெர்மன் தூதுவரை திருப்பிக் கொடுப்பதற்காக தீவிரவாதிகள் விதித்திருந்த நிபந்தனையின்படி 40 சிறைக் கைதிகளும் இன்று விமானம் ஒன்றின் மூலம் அல்ஜீரியா வந்து சேர்ந்தனர்.

இவர்கள் அனைவருக்கும் அல்ஜீரிய அரசாங்கம் அரசியல் அடைக்கலம் வழங்க முன்வந்திருக்கின்றது.

இந்த அரசியல் கைதிகள் அனைவரும் அல்ஜீரியா வந்து சேர்ந்து விட்டதாகத் தகவல் கிடைத்த பின்னர் மேற்கு ஜெர்மன் தூதுவரை விடுதலை செய்வதாக புரட்சிவாதிகள் அறிவித்திருந்தனர். பிராஸில் நாட்டிலுள்ள மேற்கு ஜெர்மன் தூதுவர் எஹ்ரன்ஃபிரிட் வொன். ஹல்லபன் என்பவர் அண்மையில் இரவுநேரத்தில் இடதுசாரி பயங்கரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டார்.

நான்கு ஆண்களும், ஒரு பெண்ணும் அடங்கிய பயங்கரவாதிகளின் கோஷ்டியொன்று மேற்கு ஜெர்மன் தூதுவரின் காரை நிறுத்தியது, காரின் முன்ஆசனத்தில் அமர்ந்திருந்த பாதுகாவலர் துப்பாக்கியை எடுக்க முனைந்தபோது அவரைச் சுட்டுக்கொன்றார்கள். காரின் பின்னால்வந்துகொண்டிருந்த டிரக்கிலிருந்த காவலர்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர்களில் ஒருவருக்கு படுகாயம் ஏற்படுத்தினார்கள். அதன்பின் 61 வயதுள்ள தூதுவரைக்காரிலிருந்து வெளியில் இழுத்துக்கொண்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி ஓடி மறைந்தார்கள்.

பிராஸில் அரசாங்கம் சிறைப்பிடித்து வைத்துள்ள கைதிகளைக்கொடுமைப்படுத்துவதை உடன் நிறுத்தும்படியும் அவர்களை விடுதலை செய்யும் படியும் பயங்கரவாதிகள் கோரிக்கைவிடுத்தார்கள். இந்தக்கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் மேற்கு ஜெர்மன் தூதுவர் கொல்லப்படுவார் என்றும் அவர்கள் அறிவித்தனர்.

இந்த ஆண்டில் லத்தீன் அமெரிக்க நாடொன்றில் மேற்கு ஜெர்மன் தூதுவர் ஒருவர் கடத்தப்பட்டிருப்பது இது இரண்டாவது சம்பவமாகும். கவுத்தமாலாவில் மேற்கு ஜெர்மன் தூதுவராகவிருந்த கவுன்ட் கார்ல்வொன் ஸ்ப்பிரிட்ஷ் என்பவர் கடந்த ஏப்ரல் மாதம் கடத்திச் செல்லப்பட்டு பயங்கர வாதிகளால் கொலைசெய்யப்பட்டார்

பயங்கரவாதிகள் விட்டுச் சென்றுள்ள துண்டுப்பிரசுரங்களில் அரசாங்கம் இடதுசாரிகளைக் கொடுமைப்படுத்தப்படுவது நிறுத்தப்படும் வரையில் இப்படியான ஆட்கடத்தல்கள் தொடர்ந்து இடம் பெறவே செய்யும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

---

### இமயத்தின் உச்சியில் பெண்கள்

பம்பாய், ஜூன் 16

நான்கு மலையேறும் இந்தியப்பெண்கள்கோஷ்டி இமயமலையிலுள்ள 23360 அடி உயரமுடைய ரிறிசுல் சிகரத்தை அடைந்துள்ளதாக மலையேறும்கோஷ்டித் தலைவர் டாக்டர் (செல்வி) மீனு அக்றவலிடமிருந்து கிடைத்த செய்தியிலிருந்துதெரியவந்துள்ளது

இம் மலையேறும் கோஷ்டியில் செல்வி மீனு அக்றவல் தவிர செல்வி ரீகா பாரிக் செல்வி புஷ்பா அதல்வி செல்வி ரீகா அக்றவல் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

நால்வரும் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த மலையேறும் பெண்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்களாகும். இமயமலையில் ஏறிய இரண்டாவது பெண்கள் கோஷ்டி இதுவாகும். ஏற்கனவே ஜப்பானியப் பெண்கள் கோஷ்டி இமயமலையில் ஏறுவதில் வெற்றி பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

---

### அதிகரிக்கும்

பதுளை, செவ்

இவ்வாண்டு பதுளை மாவட்டத்தில் சிறுபோகத்தில் 16127 தொன் உருளைக்கிழங்கு உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது' பதுளை விவசாயக் கமிட்டி இவ்வறிக்கையைத் தெரிவித்துள்ளது.

---

### கசுக்கொட்டை பதனிடும் யந்திரம்

லண்டன், ஜூன் 16

கசுக் கொட்டைகளைப் பதனிடும் நவீன இயந்திரம் ஒன்று பிரிட்டனில் உருவாக்கப்பட்டிருகிக்றது. பிரிட்டனிலுள்ள உஷ்ணவலய உற்பத்திப் பொருள் நிறுவனம் உருவாக்கியுள்ள இந்தப் புதிய இயந்திரம் ஒரு வருடத்தில் 1000 தொன் பச்சையான கசுக் கொட்டைகளைப் பதனிடும் சக்தி படைத்தது.

பிரிட்டிஷ் தேசிய ஆராய்ச்சி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் இந்த யந்திரத்தை வர்த்தகரீதியாகப் பெருமளவில் உற்பத்தி செய்து உலகமெங்கும் விற்பனை செய்ய முன்வந்திருக்கிறது 'கசுக்கொட்டைப் பயிர்ச் செய்கை இன்றுமுக்கியத்துவம் அடைந்துவருகிறது ஏனென்றால் மேல்நாடுகளில் இதற்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.' என்றுமேற்படி கூட்டுஸ்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

'இலங்கையும் இந்தியாவும் இன்றுகசுக் கொட்டை உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றன. ஆனால் இந் நாடுகளில் கசுக் கொட்டையைப்பதனிடும் முறைமிகப் பின் தங்கிய நிலையில் உள்ளது இதனால் அதிகரித்து வரும் தேவையை இந்நாடுகளால் சமாளிக்க முடிவதில்லை' என்று இந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்த இயந்திரத்தில் பல நுணுக்கமான கருவிகள் பொருத்தப் பட்டிருக்கின்றன. கசுக் கொட்டைகளின் மேல்தோலை உடைத்து, கொட்டைகளைச் செம்மையாகப் பதனிடுவதுடன், தோலிலிருந்து பயன்மிகு எண்ணெயை வடித்தெடுக்கும் சகல கைங்கரியங்களையும் இவ்வியந்திரம் செய்து விடுகிறது.

---

### காங்கிரஸ் சின்னம்

சென்னை ஜூன் 16

காங்கிரஸ்கட்சிகாளைமாட்டுச்சின்னத்தை தேர்தல்சின்னமாகபயன்படுத்துவது சம்பந்தமாக தேர்தல்கமிஷன் தீர்ப்பு வழங்கியிருப்பது செல்லுபடியாகும் என்று சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது.

---

### 'ஒத்துழைப்பு கொடுங்கள்'

பண்டத்தரிப்பு, செவ்

அகில இலங்கை கத்தோ

---

## 'தமிழ், சைவ வளர்ச்சிக்கு கலாச்சாரநிலையமவசியம்'

மவிட்டபுரம், செவ்

''கொழும்பில் 50 லட்சம் ரூபா செலவில் கலாச்சார பீடம் அமைக்கப்படவிருக்கிறது கொழும்பில் இவ்வளவு கூடிய பணத்தில் கலாச்சார நிலையம் அமைக்காது மட்டக்களப்பு, திருக்கோணமலை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் கலாச்சார நிலையங்கள் அமைக்க வேண்டும். இப்படி அமைத்தால் தான் இலங்கை பூராவும் சைவமும், தமிழும் வளர வழிபிறக்கும். யாழ்ப்பாணத்தில் கலாச்சார நிலையம் அமைகக ஒவ்வொரு சைவரிடமும் ஒரு ரூபாவீதம் வாங்கி சகலரின் பணத்திலும் கலாச்சார பீடம் அமைக்க சைவப்புலவர் சங்கம் நடவடிக்கை எடுக்கிறது.''

இவ்வாறு அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினரின் ஆதரவில் யாழ். மாவட்டத்தை சேர்ந்த மன்றங்களுக்கிடையில் நடந்த சைவ சமய நாடக விழாவின் 2-ம் நாள் நிகழ்ச்சிக்கு தலைமைதாங்கி பேசுகையில் சங்கத் தலைவர் திரு. வ. செல்லையா கூறினார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடந்த இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில்:

வெறும் கல்வியால் மட்டும் மக்கள் பயனடைய முடியாது. பண்பும் தேவை மக்கள் மத்தியில் பண்பை வளர்க்க சமயம் முக்கிய சாதனம். இதனாலே தான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவத்தமிழ் அறிவாளிகளை உருவாக்க வேண்டும் என்று கருத்திற் கொண்டார்.

மாணவர்களுக்கு சமயம் போதிக்க வல்லவர்கள் சைவப்புலவர்கள்தான், இவர்களை ஆரம்ப கல்வி முதல் சர்வகலாசாலை வரை உபயோகிக்க வேண்டியது சைவ மக்களின் கடமை.

நாடகம், பண்இசை, திருமுறை ஓதல் ஆகிய துறைகளிலே சென்ற சில ஆண்டுகளாக இச் சங்கம் செயல்படுகிறது. இந்த சங்கத்தை வளர்க்க யாழ்ப்பாணத்தில் சைவ கலாச்சார நிலையம் அமைப்பதுடன் அதை மையமாக வைத்து கிராமந்தோறும் உள்ள ஆலய, மடாலயங்களில் சமய கல்வியை போதிக்க வேண்டும்'' என்றார்.

சங்க காப்பாளரும், யாழ். மாநகரசபை பொறியியலாளருமான திரு. ம வைத்திலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில்:

அவர்களை ஆதரிக்க வேண்டும், எனக் குறிப்பிட்டார்.

---

### வானொலியில் இவர்களுக்கு இருட்டடிப்பு ஏன்?

கோட்டை, செவ்

கடந்த பொதுத் தேர்தல் பிரசாரத்தில் ஐக்கிய தேசியக்கட்சியை ஆதரித்தார்கள் என்பதற்காகச் சில கலைஞர்களை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நிறுத்தியுள்ளதா?

இவ்வாறு கொழும்பு மத்திய தொகுதி முதலாவது ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஆர். பிரேமதாச, தகவல் ஒலிபரப்பு மந்திரி திரு. ஆர். எஸ், பெரேராவைக் கேட்டுள்ளார்.

பொதுமக்களின் எதிர்ப்பின் காரணமாக, சில கலைஞர்களின் பாடல்கள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதென இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்தனர்.

சில கலைஞர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சார்பாகப் பாடல்களை ஒலிபரப்பியதாகப் பொதுமக்களிடம் இருந்து அதிகமான புகார்கள் வந்திருப்பதாக அவ்வதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். ஆகையால் பொதுமக்களின் எதிர்ப்பால் தற்காலிகமாக அக்கலைஞர்களுடைய பாடல்களை ஒலிபரப்புவதை நிறுத்தியுள்ளோம் எனவும் சொன்னார்கள்.

திரு பிரேமதாசாவின் கடிதத்தில் குறிப்பிட்ட கலைஞர்கள் முகைதீன்பேக், ஏச். ஆர். ஜோதிபால, ஜே. ஏ. மில்ரன் பெரேரா, எடிஜ மனே. ருக்மணிதேவி, எம். எஸ் பெர்னாண்டோ.

கடந்த கொழும்பு மாகரசபைத் தேர்தலில் பம்பலப்பிட்டி வட்டாரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளராக திருமதி ஜி. பி. எஸ். ராணி பெரேரா போட்டியிட்டார். ஆனால் அவரது நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம நிறுத்தவில்லை என்பதையும் திரு. பிரேமதாச தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

---

### பொதுச் சந்தை

விஸ்வமடு, செவ்

தர்மபுரத்தில் இம்மாதம் 17-ம் திகதி ஒரு பொதுச் சந்தை ஆரம்பிக்கப்பட விருக்கிறது. இங்கு மரக்கறி வகைகளும், மீன்வகைகளும்

---

பிரி தேர்தல் முடிவுகள்
### 40 மொழிகளில் ஒலிபரப்பப்படும்

லண்டன், ஜூன் 16

இம்மாதம் 18-ந் திகதி நடைபெறவிருக்கும் பிரிட்டிஷ் பொதுத் தேர்தல்பற்றி பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (பி பி ஸி) உலகடங்கிலுமுள்ள தனது கோடிக்கணக்கான நேயர்களுக்கு 40மொழிகளில் ஒலிபரப்புச் செய்யும் பி- பி.ஸி. வெவிநாட்டுச் சேவையில் நேயர்கள் இந்த விபரங்களைக் கேட்டு அறியலாம்.

செய்தி அறிக்கைகள் மட்டுமன்றி பிரிட்டிஷ் ஜனநாயக பாராளுமன்ற முறை தேர்தல் நடைமுறை அரசியல் கட்சிகளின் தலைவர்களினது வாழ்க்கைக்குறிப்புகள் இதுபோன்ற பொதுத் தேர்தலையொட்டிய பல்வேறு அம்சங்கள் ஒலிபரப்பாகும்.

வாக்களிப்புத் தினத்தன்றும் மறுதினமும் (ஜூன் 19-ம் திகதி) தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும்.

---

### நற்கருணைவிழா

பண்டத்தரிப்பு. செவ்.

இளவாலை சென் ஜேம்ஸ் விசாரணைப் பங்கில் நற்கருணை நாதரின் திருநாள் இம்மாதம் 28ம் திகதி நடைபெறவிருக்கிறது. கிராமத்து வீதிகளூடாக நற்கருணை நாதரின் ஊர்வலம் நடைபெறவிருக்கிறது.

---

பாடசாலை வளர்ச்சி
### பெற்றோரும் உதவவேண்டும்

உரும்பராய், செவ்வாய்

'மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு அரசாங்கத்தை மட்டும் நாம் எதிர்பார்க்கக் கூடாது. எங்கள் வருங்காலச் சந்ததியினரின் கல்வி வளர்ச்சிக்கு வசதியான முறையில் பாடசாலைக் கட்டிடங்களை அமைக்க உதவி புரிய வேண்டும் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையின் வளர்ச்சியில் ஊர் மக்கள் எப்பொழுதுமே அக்கறை காட்டிவந்துள்ளனர். உரும்பராயைச் சேர்ந்தவரும் தற்போது மலாயாவில் வசிப்பவருமான திரு. தம்பு குமாரசாமி சைவத்தமிழ் வித்தியாசாலையில் தம் பெயரிலேயே ஓர் அழகிய கட்டிடத்தை அமைத்துக்கொடுத்தமை பாராட்டக் கூடியது' என உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாக சபைக்கூட்டத்தில் உரையாற்றிய திரு அ. இளையதம்பி குறிப்பிட்டார்.

உரும்பராய் சைவத்தமிழ்

---

இஸ்ரேலியர் பிடித்த
## அரபுப் பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டும்
### இந்திரா காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானம்

புதுடில்லி, ஜூன் 16

'இந்தோசீனாவில் இருந்து வெளிநாட்டுத் துருப்புகள் அனைத்தும் உடனடியாக வெளியேற வேண்டும் துருப்புகள் வெளியேறுவதன் மூலமே பிரச்னையை மாநாடு கூட்டி தீர்க்கமுடியும் போர் நிலைமையில் எதுவித மாற்றமுமின்றி விரிவடைந்து போவதால் அமைதி ஏற்படப் போவதில்லை. மேற்கு ஆசியாவில் இஸ்ரேல் பிடித்துள்ள அரபுப்பகுதிகளில் இருந்து இஸ்ரேல் வெளியேறவேண்டும்' அப்பொழுது தான்

## மதச்சார் பற்ற இந்தியாவில் இவர்களுக்கு இடமில்லை

ரார்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாவிடின் இடதுசாரித் தீவிரவாதிகள் இந்நிலவரத்தைப் பயன்படுத்திக் கொள்வார்கள். நாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நது வெளிநாட்டுத் துருப் புகள் அனைத்தும் உடனடி

வதன் மூலமே பிரச்னையை யாநாடு கூட்டி தீர்க்கமுடி

விரிவடைந்து போவதால் அமைதி ஏற்படப் போவதில்லை. மேற்கு ஆசியாவில் இஸ்ரேல் பிடித்துள்ள அரபுப்பகுதிகளில் இருந்து இஸ்ரேல் வெளியேறவேண்டும்' அப்பொழுது தான் அங்கு அமைதியேற்பட வழிபிறக்கும்.

## மதச்சார் பற்ற இந்தியாவில் இவர்களுக்கு இடமில்லை

மதச்சார்பற்ற இந்தியாவில் ராஷ்டிரீய சுயம்சேவ சங்கம், ஜமாயத்-ஏ-இஸ்லாமி முதலிய படைகள் போன்ற அமைப்புக்களைக் கொண்ட ஸ்தாபனங்களுக்கு இடம் கிடையாதென்றும் இத்தகைய ஸ்தாபனங்கள் வகுப்புவாத வன்முறையாலும் துவேஷத்தாலும் சமூகத்தை தொடர்ந்து நச்சுப்படுத்த விடலாமா என்பதை அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலனை செய்யவேண்டும் என்றும் கூறும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. வகுப்புவாதக் கொள்கையை அடிப்படையாகக்கொண்ட கட்சிகளையும் ஸ்தாபனங்களையும் உறுதியுடன் எதிர்த்து நிற்கவேண்டுமென்ற தீர்மானமும் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

பெரும்பான்மை வகுப்பினரின் வகுப்புவாதத்துக்கும் சிறுபான்மை வகுப்பினரின் வகுப்புவாதத்துக்குமிடையே பாகுபாடு காட்டலாகாது. ஏனெனில் ஒரு வகுப்பில் வகுப்புவாதம் தோன்றினால்இன்னொருதரப்பிலும் வகுப்பு வாதத்தை அது வளர்க்கும். எனவே எல்லா நிலைகளிலும் அதாவது சமூக, பொருளாதார அரசியல் நிலைகளில் வகுப்புவாத சக்திகளை சமாளிக்கவேண்டுமென்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

### அமைதியைக் காக்கும் படை

வகுப்பு சௌஜன்ய லட்சியத்தை பேட்டைக்குப் பேட்டை, கிராமத்துக்குக் கிராமம் பரப்புவதற்காக ஒரு செயற்படையை கட்சி ஏற்படுத்த வேண்டும்என்று வகுப்பு சௌஜன்யம் பற்றி தீர்மானிக்கப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்டுளது. இந்தத் தீர்மானத்தில் வகுப்புக் கலவரங்கள் ஏற்படும்போது இந்தப்படைகள் அமைதியை காக்கும் படைகளாக பயனுள்ள முறையில் 'இயங்கவேண்டும்' என்றும் கூறப்பட்டுள்ளது. ஒரு சமூகத்துக்கு இருக்க வேண்டிய நற்பண்பு. சகிப்புத்தன்மை, நாகரீக உணர்வு ஆகியவற்றின் துணைகொண்டு வகுப்புவாத தீமையை முறியடிக்குமாறு இத்தீர்மானம் வேண்டுகோள் விடுக்கிறது.

## நக்ஸல்பாரிகள் குறித்து காரியக் கமிட்டி கவலை

சுயநல சக்திகள், வலதுசாரி பிற்போக்குச் சக்திகள், வகுப்புவாதச் சக்திகள், இடதுசாரி அதிதீவிரவாதம், பிராந்தியவாதம் ஆகிய ஐந்து இடங்களிலிருந்து கட்சியின் இலட்சியமாகிய ஜனநாயக சோஷலிசத்திற்கு ஏற்படும் அபாயங்களைக் கட்சி அங்கத்தினர்கள் முறியடிக்கவேண்டும் என்று அரசியல் தீர்மானம் கூறுகிறது.

இந்தச் சக்திகளைச் சரியாகப் புரிந்துகொண்டு ஒரு திட்டவட்டமான செயல் திட்டம் மூலம் இவற்றை முறியடிக்க வேண்டுமென்று இத்தீர்மானம் கூறுகிறது

'கம்யூனிஸ'ப் பூச்சாண்டியைக் கிளப்பிவிட்டு மக்களின் மனதைத் திட்டமிட்ட முறையில் குழப்புவதற்கு சுயநலச் சக்திகள் தொழிலதிபர்களை ஆதரிக்கும் பத்திரிகைகளைப் பயன்படுத்தி வருவதாகவும் இத்தீர்மானம் கூறுகிறது

நக்ஸல்பாரிகளின் அட்டூழியங்கள் வளர்ந்துவருவது பற்றியும் பிராந்திய மனப்பான்மைகளும், இதர குறுகிய மனப்பான்மைகளும் தீவிரமடைந்து வருவதுபற்றியும் ஆழ்ந்த கவலையைக் காரியக்கமிட்டி தெரிவித்துள்ளது. மத்தியில் பலமான நிலையான அரசு இருந்தால் தான் இந்தப் பிராந்தியப் போக்குகளையும், குறுகிய போக்குகளையும் முறியடிக்க முடியுமென்று காரியக்கமிட்டி கருதுகிறது.

### ஜனநாயக சோஷலிசமே முக்கியம்

ஜனநாயக சோஷலிசம் தான் முக்கியம். ஜனநாயகம், சோஷலிசம் இரண்டையும் கட்சி இணைக்கவேண்டும். மதச் சார்பின்மை, சோஷலிசம் ஆகியவற்றில் நம்பிக்கையுள்ள அனைவரின் ஒத்துழைப்பையும் கட்சி நாடவேண்டும். புதிய காங்

4-ம் பக்கம் பார்க்க

புதுடில்லியில் 3 நாட்கள் நடைபெற்ற இந்திராகாந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

முதல்நாள் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து அக்கிராசனர் ஜெகஜீவன்ராம் பேசுகையில் உழைப்பின் பலன்கள் நியாயமாக விநியோகமாகும்படி காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

...ரர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாவிடின் இடதுசாரித் தீவிரவாதிகள் இந்...லவரத்தைப் பயன்படுத்...க் கொள்வார்கள். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தலைதூக்கும் வகுப்புவாத அபாயத்தை தக்க முறையில் சமாளிகக மக்கள் தயாராகவிருக்க வேண்டும். புதுக் காங்கிரஸின் கொள்கைகள் வேலைத்திட்டங்கள் குறித்து மக்களுக்கு ஏற்பட்டுள்ள அளவிலா ஆனந்தத்தைக் கட்சி பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

கொடியேற்ற விழாவிலும் துவக்கவுரையின் போதும் அவர் வகுப்புவாதத்தைப் பலமாகக் கண்டித்துப் பேசினர்.

---

## 'ஒத்துழைப்பு கொடுங்கள்'

பண்டத்தரிப்பு, செவ்

அகில இலங்கை கத்தோலிக்க மேற்றிராணிமார் சார்பில் இலங்கை அதிமேற்றிராணியார் கருதினல் கூறே ஆண்டகை விடுத்த செய்தியில் உண்மையானதும் தெளிவுமான ஒத்துழைப்பை புதிய அரசாங்கத்திற்கு கத்தோலிக்க மக்கள் அளிக்கவேண்டும் என்று கேட்டுள்ளார்.

கருதினல் ஆண்டகை மற்றும்நான்கு மேற்றிராணிமார்களுடன் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைச்சந்தித்துப் பாராட்டுத் தெரிவித்தது வாசகர் அறிந்ததே.

வேண்டும்'' என்ருர்.

சங்க காப்பாளரும், யாழ். மாநகரசபை பொறியியலாளருமான திரு. ம வைத்திலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில்:

சைவப் புலவர் சங்கம் மலாயா. இந்தியா முதலிய இடங்களிலும் ஆங்காங்கு நடைபெற்ற தமிழ் மகாநாடுகளிலும் சைவ சித்தாந்த மகாநாடுகளிலும் பிரதிநிதிகளை அனுப்பிவைத்து கருத்துக்களை கூறியுள்ளமை இலங்கையில் எந்த நிறுவனமும் செய்ய முடியாத சேவை, எனக் குறிப்பிட்டார்.

நால்வர் வழியில் நாவலர் காட்டிய சைவத்தை ஈழத்தில் அவர் சிந்தனை செய்த கருத்தை உருவாக்க சைவப்புலவர் முன்னிற்கின்

## பொதுச் சந்தை

விஸ்வமடு, செவ்

தர்மபுரத்தில் இம்மாதம் 17-ம் திகதி ஒரு பொதுச் சந்தை ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இங்கு மரக்கறி வகைகளும், மீன்வகைகளும் விற்பனை செய்யப்படும். கிளிநொச்சி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. ஆனந்தசங்கரி இச்சந்தையைத் திறந்து வைக்கிருர்.

---

## 12 அடி நீளப் பாம்பு

விஸ்வமடு. செவ்வாய்

சுமார் 12 அடி நீளமும் 2 அடிச் சுற்றளவுமுள்ள வெங்கணந்திப் பாம்பு ஒன்றை விஸ்வமடு விவசாயப்படை முகாமில், படைவீரர்கள் பிடித்து வைத்துள்ளனர்.

என உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலைப் பெற்ருர் ஆசிரியர் சங்க நிர்வாக சபைக்கூட்டத்தில் உரையாற்றிய திரு அ. இளையதம்பி குறிப்பிட்டார்.

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையின் புதிய வளர்ச்சிக்கு அயராது உழைத்து வரும் தலைமையாசிரியர் திரு சு. குமாரசேகரத்தின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்க வேண்டும், என்ற மற்ருெரு தீர்மானமும் நிறைவேறியது.

சைவத் தமிழ் வித்தியாசாலையை ஒருசிறந்த மகா வித்தியாலயமாக உயர்த்துமாறு சங்கம் விடுத்த வேண்டுகோளை புதிய அரசாங்கத்திடம் வற்புறுத்த வேண்டும் என்று திரு வ. நடேசலிங்கம், திரு ஆ. சேனதிராசா உட்படப்பலர் பேசினர்.


இன்று (17-6-70) மாலை 3-30 மணி தொடக்கம் 9-30 மணிவரை

யாழ்ப்பாணம்

சன்லைற் டையேர்ஸ் அன் றைக்கிளீனேர்ஸ்

30-வது ஆண்டு விழாவும்

"வாழ்க்கையின் சோதனை"

(உரிமையாளர் திரு. ஆர். செல்லையா அவர்களின் சுயசரிதை)

நூல் வெளியீட்டு விழாவும்




இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம். தலைவர்: கவிஞர், வி. கந்தவனம் B. A.

நிகழ்ச்சிகள்:

தமிழ் வாழ்த்து: கவிஞர், வே. ஐயாத்துரை
வரவேற்புரை: திரு. எஸ். இராசலிங்கம்
தலைவர் உரை:
நூல்வெளியீட்டுரை: வித்துவான், சைவப்புலவர் க, கணபதிப்பிள்ளை B. A.
முதற்பிரதிபெறுபவர்: திரு. த. சிவசம்பு
பாராட்டுரை: கவிஞர் செ. சுந்தரம்பிள்ளை
உரிமையாளர் உரை.
நன்றியுரை: கவிஞர் இ. நாகராஜன்

கலை நிகழ்ச்சிகள்:

நடனம்

யாழ் - திருநெல்வேலி கலைகோயில் கலைஞர், வேல் ஆனந்தனும் மாணவிகளும்

"விஸ்வாமித்திரா - மேனகா"

நாட்டிய நாடகம்

பங்கு பற்றுவோர்:
கலைஞர் வேல் ஆனந்தன்
குமாரி பத்மினி நடராசா
செல்வி சாந்தகௌரி நடராசா
செல்வி பவளராணி பரராஜசிங்கம்
செல்வி சந்திரகலா செல்வரத்தினம்

பக்கவாத்தியம்:
பாட்டு: சங்கீதபூஷணம் திரு. பொன். புஷ்பரத்தினம்
வயலின்: பிரமஸ்ரீ சோமாஸ்கந்தசர்மா
மிருதங்கம்: திரு. த. பாக்கியநாதன்
முகர்சங்: பிரமஸ்ரீ ஆத்மானந்தசர்மா

வில்லுப்பாட்டு:

பொருள்: வாழ்க்கையின் சோதனை

இந்திய திருவாவடுதுறை ஆதீன வில்லிசைப் புலவர் சாத்தூர், ச. பா. பிச்சைக்குட்டி அவர்களின் பிரதம சிஷ்யன்

திரு. சபா. சதாசிவம் கோஷ்டியினர்

வில்லிசை: திரு. சபாசதாசிவம்
ஆர்மோனியம்: திரு. எஸ் நல்லதம்பி
மிருதங்கம்: திரு. எஸ். சிவானந்தம்
விற்கடம்: திரு. என். தனபால்
உடுக்கு: திரு. கே. சிதம்பரப்பிள்ளை
பக்கப்பாட்டு: திரு. பி. தணிகாசலம்
விகடம்: திரு. பி. கே. குமார்

வில்லுப்பாட்டு நிகழ்த்தும் வேலணையூர் சபா. சதாசிவத்துக்கு 'வில்லிசை மன்னன்' பட்டம் வழங்கப்படும். அன்புள்ளவர்கள் ஆதரவாளர்கள் அனைவரையும் அழைக்கின்றேம்.

இங்ஙனம்
சன்லைற் டையேர்ஸ் அன் றைக்கிளீனேர்ஸ்.
பஸ்நிலையத்துக்கு முன்பாக,
23, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

நூலின் விலை குறிப்பிடப்படவில்லை. அன்பிற்கமைந்த தொகையைக் கொடுத்து இந்நூலின் பிரதியை ஷெ விழாவில் பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

தங்கள் வாழ்க்கை முயற்சியில்லாமல் சப்பென்றிருந்தால், ஏழைகள், நோயாளர் முதலியவர்களுக்கு சேவை செய்வதில் சற்றே ஈடுபட்டால் வாழ்க்கையைப் பயனுள்ளதாகச் செய்து இனிப்பாக்கலாம். பிறருக்குப் பணிசெய்வதிலேதான் உண்மை இன்பமுண்டு. — சுவாமி ராமதாஸ்.


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆனி மாதம் 3-ந் திகதி (17-6-70)


# இஸ்ரேல் — இலங்கை உறவுகள்

இஸ்ரேல் விஷயமாக சிம்மாசனப்பிரசங்க மூலம் இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ள புதிய நடவடிக்கை துணிச்சலானதுடன், மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்த அது வெகுதூரம் உதவுமென்றே நம்புகிறோம்.

சென்ற 1967-ம் வருடம் நடந்த ஆறுநாள் யுத்தம் மூலம், ஐக்கிய அரபு குடியரசுக்கும், ஜோர்டான், சிரியா முதலிய அரபுநாடுகளுக்கும் சொந்தமான பல இடங்களை இஸ்ரேல் பலாத்காரமாக ஆக்கிரமித்துக் கொண்டது. அந்த இடங்களிலிருந்து இஸ்ரேல் தன் படைகளை திருப்பி அழைக்க வேண்டுமென்றும், அப்பகுதிகளை திருப்பி அரபுநாடுகளிடம் ஒப்புவித்துவிடவேண்டுமென்றும், ஐ. நா. பாதுகாப்பு சபையும் இந்தியா உள்ளிட்டு பல நாடுகளும் தீர்மானங்கள் நிறைவேற்றின. என்றாலும் அத் தீர்மானங்களை எல்லாம் இஸ்ரேல் இலட்சியம் செய்யவில்லை. பிடித்த இடங்களை விட முடியாதென்று சொல்லி, அங்கிருந்து அடிக்கடி தாக்குதல்களையும் நடத்திவருகின்றது. ஐ. நா. பாதுகாப்பு சபை இவ்விஷயமாக எதுவும் செய்யமுடியாமல் இருக்கின்றது.

இலங்கையில் மூன்றில் ஒரு பங்கேயுள்ள மிகச் சிறிய நாடான இஸ்ரேல், ஐ. நா. பாதுகாப்புசபையையும் மற்றும் பல நாடுகளையும் அலட்சியம் செய்து வருகையில், அங்கு யுத்தத்தை நிறுத்த வேறு என்னதான் வழி? இலங்கை முதலிய நாடுகளால் இவ் விஷயமாக எதுவும் செய்ய முடியாதா? என்பது முக்கிய கேள்வி. அக் கேள்விக்கான பதிலே சிம்மாசனப் பிரசங்கத்தில் வெளியிட்டுள்ள நடவடிக்கை இதைக் கேட்டதும், இஸ்ரேல் பரபரப்படைந்து, அரபுநாடுகளும் ஐ நா தீர்மானப்

என்று அஞ்சக்கூடிய நிலை ஏற்பட்டது. பலாத்காரமாக முன்னேறிய இடங்களை புது சீனம் தானாகக் காலிசெய்து பின்வாங்கியது. அப்போது இலங்கையின் பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ, இரு நாட்டு தலைநகரங்களுக்கும் நேரில் சென்று பேசி, யுத்தம் பரவாமல் தடுத்து அமைதியை நிலைநாட்ட உதவினர். அதேபோல, இஸ்ரேலும் புதிதாக ஆக்கிரமித்த இடங்களைத் தானாகக் காலிசெய்து பின்வாங்குவதன் மூலமே அங்கு அமைதி ஏற்படமுடியும். அரபுநாடுகளுக்குத் தேசிய மானம் உண்டென்பதையும் அதை மதித்து நடக்க வேண்டுமென்பதையும் இஸ்ரேல் உணர்ந்தால், இப்படி பலாத்காரமாகப் பிடித்த இடத்தை விடாப்பிடியாக வைத்துக்கொண்டிருக்காது. இஸ்ரேலுக்கு உண்மையில் அமைதியில் விருப்பமிருக்குமாயின், அது வீண் வாதங்களைச் செய்யாமல், புதிதாகப் பிடித்த இடங்களை விட்டுவிடவேண்டும். அப்படிச்செய்தால் சமாதானமும் ஏற்பட வழிபிறக்கும்.

இஸ்ரேலின் பிடிவாதப் போக்கு சரியல்ல என்பதை அதற்குப் படும்படி அறிவுறுத்தவே இலங்கை அதனுடன் உறவுகளை நிறுத்தி வைக்கத் தீர்மானித்துள்ளது. தனிப்பட்ட முறையில் இஸ்ரேலுடன் நமக்கு எவ்வித சச்சரவுமில்லை. அப்பகுதியில் சீக்கிரத்திலே அமைதி ஏற்படவேண்டுமென்ற ஒரேநோக்கத்துடன் தான் இலங்கை இவ்வித முடிவு செய்திருக்கின்றது

பலாத்காரத்தின் மூலம் பிடித்த பகுதிகளைத் தான் எப்போதும் வைத்திருக்கலாமென்று இஸ்ரேல் நினைக்குமாயின் அது நடவாத காரியம். என்றாவது திருப்பிக் கொடுக்கவேண்டிய அப்பகுதிகளை இப்போதே அது கொடுக்க

## பிரிட்டிஷ் பொதுத்தேர்தல்

# தொழிற்கட்சி மீண்டும் பதவிக்கு வருமா?

பிரிட்டனில் தேர்தல் இம்மாதம் 18ந் திகதி நடைபெறவிருக்கிறது. வாக்காளர்களில் 3·3 சதவீதமானவர்களின் வாக்குகள் இந்த முறை எந்தப் பக்கம் சாய்கின்றதோ அந்தக் கட்சிக்கே வெற்றி வாய்ப்பு ஏற்படும் என்பதைபிரிட்டிஷ் தேர்தல் பற்றி ஆராயும் அரசியல் நிபுணர்கள் அறிவார்கள்.

தேர்தல் பிரசாரக் காலம் ஆரம்பமானது முதற்கொண்டே தொழிற்கட்சி முன்னணி வகித்துவருகிறது அவ்வப்போது நடத்தப்பட்ட அபிப்பிராயக் கணிப்புகளின்படி தொழிற்கட்சிக்கு இருக்கும் செல்வாக்குச் சில சமயம் கூடுவதாகவும் சில சமயம் குறைவதாகவுமே இருந்துவந்துள்ளது. என்றாலும் தொழிற்கட்சியே கன்சர்வேட்டிவ் கட்சியை விட முன்னணியில் இருந்து வருகிறது. கடைசியாக வெளியான அபிப்பிராயக் கணிப்பின்படி தொழிற்கட்சி 7 சதவீதம் முன்னணியில் திகழ்வதாக அறிவிக்கப்பட்டது.

வாக்காளர்களின் 3.3 சதவீதமானவர்களின் ஆதரவு சமரீதியாக அமையுமானல் இரண்டு கட்சிகளுக்குமே காமன்ஸ்சபையில் சமபலம் ஏற்படுமென்று கருதப்படுகிறது.

1966ம் ஆண்டுத் தேர்தலில் தொழிற்கட்சி 53·3 சதவீத வாக்குகளையும், கன்சர்வேடிவ் கட்சி 46·7 வீத வாக்குகளையும் பெற்றன. இந்த இரு கட்சிகளுக்குமிடையில் சமவாக்குப் பலத்துக்குத் தேவையான மேற்குறித்த 3·3சதவீத வாக்குகள். இதில் சிறிய கட்சிகளுக்கு அளிக்கப்படும் வாக்குகள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இந்த 3 3 சதவீத வாக்காளர்களின் சாய்வு எந்தப் பக்கம் இருக்கிறதென்பதிலேயே அரசியல்வாதிகள், விமர்சகர்கள். மற்றும் வாக்காளர்களும் தம் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருப்பார்கள். இந்தச் 'சாய்வு' 3 சதவீதம் அல்லது அதற்குக் குறையுமானல் தொழிற்கட்சி வெற்றிபெறுமென்றும் 3 6 சதவீதம் கூடுமானல் கன்சர்வேடிவ் கட்சி வெற்றி பெறுமென்றும் அவதானிகள் கூறிவிடுவார்கள். எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும் இது மிகக் குறைந்த பெரும்பான்மைப் பலத்தையே காட்டுவதாக அமையும்.

1 சதவீதச் 'சாய்வு' என்றால் 15அல்லது 20தொகுதிகளில் மாற்றுக்கட்சிக்குப் போய்விடுமென்று பொருளாகும். இதன்படி 4·3சதவீதச் 'சாய்வு' ஏற்படுமானல் கன்சர்வேடிவ் கட்சிக்கு 30 ஆசனங்கள் அதிகப்படியாகக் கிடைத்துவிடும்

பிரிட்டனில் நடைபெற்ற கடந்த 18 தேர்தலில் 7 தேர்தல்களே அரசாங்கத்தை மாற்றுவதாக அமைந்தன.

### முக்கிய கொள்கைகள்

பிரிட்டிஷ் மக்கள் தீவிரக் கொள்கைகளுக்கு அதிக முக்கியம் கொடுப்பதில்லை. இரண்டு பிரதான அரசியல் கட்சிகளின் கொள்கைகளுக்குமிடையில் பெரிய வேறுபாடுகள் இல்லை. இரண்டுக்கும் அடிப்படைக் கொள்கையில் சிறிய வேறுபாடுகளே உண்டு.

முக்கியமாக குறிப்பிட வேண்டியது வெளிநாட்டுக் கொள்கை ஆகும். பிரிட்டனிலுள்ள இரண்டு கட்சிகளும் ஐக்கியநாடுகள்சபை ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கம், வர்த்தகம், போக்குவரவு ஒப்பந்தம் வடஅத்திலாந்திக் பாதுகாப்பு அமைப்பு ஆகியவற்றிற்கிடையிலான தொடர்பில் ஏகமனதாக ஒரேகொள்கையே பின்பற்றுகின்றன. ஐரோப்பிய பொதுச்சந்தையில் பிரித்தானியா சேருவதை இருகட்சிகளும் விரும்புகின்றன. இவ்வாறு இருப்பினும் சிறிய வித்தியாசம் வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்து உண்டு.

உதாரணமாக பொருதார கொள்கையைப் பொறுத்தவரை மரபுவழிவந்த தொழிற்கட்சியின் கொள்கையானது அதிக தலையீட்டைக்கொண்டது தலையிடாக்கொள்கையை கன்சவேஸ்டிக் கட்சி கடைப்பிடிக்கின்றது.

இவ்வாறு சிறிய வேறுபாடு நிலவியபோதும்பொது நலத்திட்டம், தனிப்பட்ட பிரஜைகளின் நலன், ஆகியவற்றில் இருகட்சிகளும் நடவடிக்கைகளில் ஒரே மாதிரியான சிரத்தை எடுத்துவந்துள்ளது.

பாதுகாப்புக் கொள்கையைப் பொறுத்தவரை கிழக்கு சுவெஸ் பகுதியிலிருந்து பிரித்தானியப் படைகளைத் திருப்பி அழைப்பதில் இருகட்சிகளிடமும் கருத்து வேறுபாடு நிலவின. ஆனால் அணு ஆயுத ஒப்பந்தம். ஐரோப்பியபாதுகாப்பு ஆகியவற்றில் ஒரே கருத்தை கொண்டிருக்கின்றன.

வரிவிதிப்பும் அரசாங்கத்தின் செலவும் மற்றொரு விஷயமாகும். ரொக்கப்பணமாகவும், தேசிய பொருட்களாகவும், 1960-ம் ஆண்டில் பிரிட்டனில் படிப்படியாக வரி அதிகரிக்கப்பட்டது. உலகத்திலுள்ளஎல்லா எதிர்க்கட்சியினரையும் போல் கன்சவேடிவ் கட்சியும் வாக்காளருக்கு விடுக்கும் வேண்டுகோள்...

# சதாவதானி கதிரைவேற்பிள்ளைக்கு சிலை எழுப்ப நடவடிக்கை

நாவலர் மாணவ பரம்பரையில் வந்த சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளையின் ஜனன நூற்றாண்டில் அன்னாருக்குச் சிலை அமைத்துப் பெருவிழா எடுக்க கதிரைவேற்பிள்ளை கலாமன்றம் முயற்சி எடுத்து வருகிறது. இந்த விழாவுக்கான தேசிய விழாச்சபை ஒன்றும் நிறுவப்படவுள்ளது. அதற்கு முன்னோடியாகச் சிலை அமைத்தல் முதலான ஆரம்

திய 'நா. கதிரைவேற்பிள்ளை சரித்திரம்' என்ற நூலை மறுபிரசுரம் செய்து வெளியிட்டதோடு கடந்த பதினைந்து ஆண்டுகளாக நா. கதிரைவேற்பிள்ளை நினைவைத் தமிழ்மக்கள் ம[illegible]ில் பதிய வைத்தபெருமையும் இந்தக் கலாமன்றத்திற்குண்டு. கலாமன்றப் பணிப்புக்குள் இயங்கும் த[illegible] ஆராய்ச்சித் திட்டம் ஒன்றை உருவாக்கி வெளி

## பண முடிப்பு வழங்க முடிவு

வெள்ளவத்தை, செவ்வாய் "பொது வேலைத் திணைக்களத்தின் கட்டிடப் பகுதியில் பல்கலைக்கழகப் [illegible] பிரிவில் படம் வரைஞராகக் கடமையாற்றிய திரு. க நடராசாவின் திடீர் மரணம் ஈடு செய்ய முடியாத இழப்பாகும். திரு. நடராசாவின்

# ஜெயராஜன் எழுதுவது:

நயினாத்தீவுத் திருவிழாவுக்கு ஏராளமான பக்தர்கள் யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலிருந்து செல்லுகின்றனர். அவர்களுக்கு நீர், மோர், பானகம், கோப்பி முதலியவற்றைக் கொடுப்பதற்காக வேலணையிலே புதிதாகக் கட்டப்படும் திருமுருகன் கோயிலுக்கு எதிரிலே ஒரு தண்ணீர்ப்பந்தல் அமைந்துள்ளதாகவும் அதன் ஆரம்ப விழாவுக்கு வரவேண்டுமென்றும் ஓர் அன்பர் வந்து அழைத்தார்.

காரில் செல்லுகையில் எதிரிலிருந்து ஒரு விசேஷ பஸ்ஸில் பல சிங்கள பௌத்தர்கள் நாகதுவீபம் சென்று வழிபட்டுவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தனர். அவர்களைக் கண்டதும், கார் டிரைவர், இவர்களால்தான் யாழ்ப்பாணத்துக்கு ஆபத்தென்றும் தினசரி இப்படி பல பஸ்ஸுகளில் வருவதாகவும் வகுப்பு துவேஷத்தை சிலர் மூட்டிவிடலாமென்றும் பயந்து கூறினர்.

இதற்கிடையே வேலணை வந்துவிட்டது. பெரிய பந்தல் போட்டு அழகுபடுத்தியிருக்கிறார்கள். எதிரிலே திருமுருகன் கோயில் கட்டப்பட்டு வருகிறது. சீக்கிரத்தில் கும்பாபிஷேகம் நடக்கலாம்; முருகன் படம் வைத்து கற்பூரமேற்றி ஆரம்பவிழா நடத்துகையில் பௌத்த சிங்கள யாத்திரிகர்கள் ஆண்களும் பெண்களுமாக ஒரு பெரிய பஸ்ஸில் வந்தனர். பஸ் அன்புடன் நிறுத்தப்பட்டு அதிலிருந்தவர்களுக்கெல்லாம் பானங்களை பல வாலிபர்கள் அன்புடன் கொடுத்தனர். அதை அவர்கள் முகமலர்ச்சியுடன் வாங்கி குடித்தார்கள். அதிலிருந்த சிங்கள பௌத்தர்கள் எல்லாரும் தங்கள் இரு கைகளையும் கூப்பி 'சாது சாது' என்று நன்றியும் வணக்கமும் கூற பஸ்ஸும் புறப்பட்டது.

இவர்களைப்பற்றி அச்சம் தெரிவித்த அந்தக் கார் டிரைவர் இதையெல்லாம் பார்த்தார். இன்னும் இவர்களைப்பற்றி உங்களுக்குப் பயம்தானா? என்று கேட்டேன். அவர் சிரித்து தலை அசைத்தார். நமது அன்பினால் விரோதிகளையும்கூட நண்பர்களாக்கி விடலாம். நம் உள்ளம் தூய்மையாக மனமும் மாறக்கூடும் அல்லவா!

சாதி சமய வேற்றுமை இன்றி, எல்லோருக்கும் இந்தத் தர்மம் செய்வது நல்ல புண்ணியம் புண்ணியம் மட்டுமல்ல. தமிழ் சிங்கள நல்லுறவுக்கும் இது வழி செய்வதாகும். இங்கு தாகசாந்தி செய்துகொண்டு நன்றியும் வணக்கமும் தெரிவித்தவர்களுக்கு தமிழர் பால் எவ்வித அன்மற்றஎண்ணங்களும் ஏற்படுமா? அங்கு ஊர் சென்றதும் இந்த அன்புகளை எல்லாம் பலரிடமும் செல்லக்கூடும். நாம் வீண் சந்தேகத்தையும் பயத்தையும்விட்டு இவ்வித அன்புப் பணிகளைச் செய்து வந்தால் அதன்மூலம் மற்றவர்களின் மனதையும் வென்றுவிடலாம்.

இதற்கான வாய்ப்பு எல்லாருக்கும் எல்லா இடத்திலும் கிடைக்க முடியாது. தினசரி பல பஸ்ஸுகளில் தென்னிலங்கையிலிருந்து ஏராளமான சிங்கள பௌத்த அன்பர்கள் நயினாதீவுக்கு யாத்திரையாக வருகின்றனர். நம் இடம் தேடி வருபவர்களுக்கு நாம் இவ்வித அன்புப்பணி செய்வதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. இந்த சில நாட்கள் மட்டுமல்ல. வருடமனைத்துப் அந்தப் பாதையிலும் நயினாதீவிலும் இவ்வித தர்மத்தைச் செய்வதன் மூலம் தமிழர்கள் தங்களுக்குத் தாங்களே நன்மை செய்துகொண்டவர்களாவர். தர்மம் நிச்சயம் தலைகாக்கும்.

வேலணையிலே பல தர்மவான்களும் சேர்ந்து இந்த தண்ணீர்ப்பந்தல் பணியை உற்சாகமாகச் செய்வதைக் கண்டேன். இந்தப் பணியை சிறிய அளவிலாவது வருடமனைத்தும் செய்ய முடியுமாயின் அது பலவிதங்களிலும்வேலணைக்குமட்டுமன்றி நாட்டுக்கே நன்மை பயக்கும் நயினை நாகபூஷணியும் வேலணை திருமுருகனும் இதற்குத் துணை செய்வார்களாக! வாழ்க வேலணை தர்மவான்கள்!

0 0 0


வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க, மன்னன் கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க, நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக

முடியாதா? என்பது முக்கிய கேள்வி. அக் கேள்விக் கான பதிலே சிம்மாசனப் பிரசங்கத்திலே வெளியிட்டுள்ள நடவடிக்கை இதைக் கேட்டதும், இஸ்ரேல் பரபரப்படைந்து, அரபுநாடுகளும் ஐ நா தீர்மானப்படி நடக்கவில்லை என்றும் அரபுநாடுகள் இஸ்ரேலை அங்கீகரித்து தங்களுடன் நேர்முகமாகச் சமரசம் பேச வேண்டுமென்றும் ஏதேதோ நிபந்தனைகளைப் போடுகின்றது இருதரப்பினரும் இப்படிப் பிடிவாதம்காட்டுகையில் யுத்தம் எப்படி நிற்க முடியும்? அதனால் யுத்தத் தீ புகைந்துகொண்டு, எந்த சமயத்திலும் இது மீண்டும் பெரிதாக உலக யுத்தமாகக் கிளம்புமென்று பயமுறுத்துகின்றது. வல்லரசுகள் இரு கட்சிகளுக்கும் பின்புறமிருந்து தூபம்போட்டு வருகையில். இந்த யுத்தம் நிற்பது சுலபமன்று.

முன்னர் இந்தியா—சீன எல்லைப்புறத்திலே சண்டை ஏற்பட்டு சீனத் துருப்புகள் இந்திய மண்ணில் வெகு தூரம் முன்னேறியதும், இரு நாடுகளுக்கும் யுத்தம் பெரிதாக மூண்டுவிடுமோ பிடித்த பகுதிகளைத் தான் எப்போதும் வைத்திருக்கலாமென்று இஸ்ரேல் நினைக்குமாயின் அது நடவாத காரியம். என்றாவது திருப்பிக் கொடுக்கவேண்டிய அப்பகுதிகளை இப்போதே அது கொடுக்க ஏன் மறுக்கவேண்டும்? இலங்கையின் இந்த நடவடிக்கை, இஸ்ரேலை ஆத்மசோதனை செய்யவும், அங்கு அமைதியேற்படவும் சற்றே தூண்டுதலாக இருக்குமாயின் அதுவே போதும். இலங்கையைப் பின்பற்றி மற்ற ஆசிய-ஆபிரிக்கநாடுகளும் இதேவித நடவடிக்கை எடுக்கவும் செய்யலாம். நிலைமை அவ்விதம் மோசமாவதற்குள்ளாக இஸ்ரேல், தான் பலாத்காரமாகப் பிடித்த பகுதிகளை விட்டு விடுவது விவேகம். இலங்கையைப் போல் இஸ்ரேலிலும் ஒரு பெண்ணே பிரதமராக இருப்பதால், இவ்விஷயத்தைப் பற்றி நிதானமாக அவர் யோசித்து, நிரந்தர அமைதிக்கான ஏற்பாடுகளைச் செய்வார் என்றே நம்புவோம்.

பெருவிழா எடுக்க கதிரைவேற்பிள்ளை கலாமன்றம் முயற்சி எடுத்து வருகிறது. இந்த விழாவுக்கான தேசிய விழாச்சபை ஒன்றும் நிறுவப்படவுள்ளது. அதற்கு முன்னோடியாகச் சிலை அமைத்தல் முதலான ஆரம்பப் பணிகளுக்கு நிதி திரட்டும் முயற்சியில் கதிரைவேற்பிள்ளை கலாமன்றம் ஈடுபட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள ஆசிரியர்களிடமும், தமிழ் அமைச்சர், ஆட்சிமன்ற உறுப்பினர்கள் மூதவைஉறுப்பினர்கள் ஆகியோரிடமும் நிதி கோரிப் பட்டியல்கள் அனுப்பப்பட்டுள்ளன. திரு. வி. க. எழு

நா. கதிரைவேற்பிள்ளை நினைவைத் தமிழ்மக்கள் மனத்தில் பதிய வைத்தபெருமையும் இந்தக் கலாமன்றத்திற்குண்டு, கலாமன்றப் பணிப்புக்குள் இயங்கும் ... ஆராய்ச்சித் திட்டம் ஒன்றை உருவாக்கி வெளிநாட்டுத் தமிழ் அறிஞர்களுடன் தொடர்பு கொண்டுள்ளனா. 19ம் நூற்றாண்டுத் தமிழ்இலக்கிய வரலாற்றில் ஈழத்தின் பங்கு, நாவலர் சகாப்தம், நா. கதிரைவேற்பிள்ளையின் பணிபோன்ற துறைகளில் வெளிநாட்டு அறிஞர்கள் ஆராய்ச்சிகளைத் தூண்டி வருகிறார்கள்.



## ‘நன்முயற்சி இனிது நிறைவேறுக’

— பண்டிதமணி

திரு. நா. கதிரைவேற்பிள்ளை, சுப்பிரமணிய உபாசகர்; நாவலர் அவர்களின் மாணவரின் மாணவர்; திரு வி. கலியாணசுந்தர முதலியாரின் கண்ட தெய்வம்-குரு.

கதிரைவேற்பிள்ளை மாயாவாத தும்சகோளரி; அத்துவித சைவ சித்தாந்த மதோத்தாரணர்; சபாப்பிரசங்க சிங்கம்; சதாவதானி; அபரகாளமேகம்.

கதிரைவேற்பிள்ளை, திருத்தொண்டர் பெருமைகளையும் திருமுறைப் பெருமையையும் காலந்தோறும் வெளிப்படுத்தி வந்தமகாபரமோபகாரிகளின் வரிசையைச் சேர்த்தவர்.

0 0

கதிரைவேற்பிள்ளையின் அபாரதிறமை ஏட்டிலடங்காது. பிள்ளையின் எழுத்துக்களத்தனையும் வாழ்க்கை வரலாறும் விமர்சனத்துடன் வெளிவரவேண்டியவை.

கதிரைவேற்பிள்ளைபிறந்த 100வது ஆண்டுஅடுத்தாண்டு இந்த 100வது ஆண்டில் பிள்ளைக்குச் சிலை நிறுவிப் பெருவிழா எடுத்தற்குக் கதிரைவேற்பிள்ளை கலாமன்றம் முன்வந்திருக்கின்றது.

கதிரைவேற்பிள்ளையின் குலதெய்வமாகிய புதுச்சந்நிதித் திருமுகன் திருவருளால் வருங்காலத்தவர்களுக்கு வழிகாட்டுவதாகிய குறித்த நன்முயற்சி இனிது நிறைவெய்வதாக.

களத்தின் கட்டிடப் பகுதியில் பல்கலைக்கழகப் பிரிவில் படம் வரைஞராகக் கடமையாற்றிய திரு. க நடராசாவின் திடீர் மரணம் ஈடு செய்ய முடியாத இழப்பாகும். திரு. நடராசாவின் சிறந்த வேலைத்திறனும், நேர்மையும், இனிய சுபாவமும் கொண்ட ஊழியர்'' என பல்கலைக்கழகப் பகுதிக் கட்டிடச் சிற்பி திரு. ரி. என். வின்யோன்ஸ் கொழும்பு கட்டிடத் திணைக்களத்தில் கடமையாற்றி சமீபத்தில் தேர்தல் கடமைக்காகக் கேகாலை சென்று லொறி விபத்தில் சிக்கி மரணமடைந்த படவரைஞர் திரு க. நடராசாவுக்குத் திணைக்கள ஊழியர்கள் ஒழுங்கு செய்த அனுதாபக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

திரு. நடராசாவின் உருவப்படத்தைக் காரியாலயத்தில் மாட்டுவதென்றும் திரு. நடராசாவின் குடும்பத்தினருக்குத் திணைக்கள ஊழியர்களின் சார்பில் பணமுடிப்பு ஒன்றினை வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

— —

## கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் 4-ம் குறுக்குத் தெருவில் இளவாலை திரு. ரீ. எஸ். அன்ரனி முத்து என்பவரினால் கண்டெடுக்கப் பெற்ற கூப்பன் ஒன்று ‘ஈழநாடு’ காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. காரியாலய நேரத்தில் அத்தாட்சியுடன் உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

— —

## பாராட்டு விழா

சித்தங்கேணி, செவ்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் அதிபர் திரு செ. சிவகுருநாத பிள்ளைக்கு சேவை நலம் பாராட்டு விழா நாளை மாலை வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் வழக்கறிஞர் திரு. எம். கதிரவேலுவின் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் திருவாளர்கள்: எம். கே. சுப்பிரமணியம், ஏ. கே. குமாரசாமி, ச. அம்மையப்பர், முதலியார் செ. சின்னத்தம்பி ஆகியோர் சொற்பொழிவுகள் ஆற்றுவார்கள்

— —

## தேர்த்திருவிழா

ஊர்காவற்றுறை, செவ்.

சரவணை - நாரந்தனை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோவில் தேர்த்திருவிழா இம் மாதம் 19-ம் திகதி நடைபெற விருக்கிறது.

களாகவும், 1960-ம் ஆண்டில் பிரிட்டனில் படிப்படியாக வரி அதிகரிக்கப்பட்டது. உலகத்திலுள்ளஎல்லா எதிர்க்கட்சியினரையும் போல் கன்சவேடிவ் கட்சியும் வாக்காளருக்கு விடுக்கும் வேண்டுகோள்களில் அநேகம் வரியை குறைக்கும் வாக்குறுதியை அடிப்படையாக கொண்டிருக்கிறது கொள்கை விளக்கத்தில்கூட நேரடி வரிகளைக் குறைக்க உத்தேசித்திருப்பதாகவும் 1966.ம் ஆண்டு தொழிற் கட்சியினால் கொண்டுவரப்பட்ட தொழில் வரியையும் ரத்துச் செய்யவிருப்பதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரிகுறைப்புக்கு தொழிற் கட்சி அரசாங்கம்எதிரானது என்று தீர்மானிப்பது தவறானதாகும். அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு சம்பள உயர்வுவழங்குவதற்காகவே வரி அதிகரிக்கப்பட்டதாக, தொழிற்கட்சிசார்பில் கூறப்படுகிறது. செலவீனங்களை சரிசமப்படுத்துவதில், முன்னேற்றம் காண்பதற்காகவும், வரிவிதிக்கப்பட்டதாக தொழிற்கட்சி மேலும் கூறுகிறது.

ஆட்சி பீடத்திலிருக்கும் கட்சி இதுவரை நாட்டிற்கு செய்த சேவைகளை வைத்து தேர்தல் களத்தில் போராட வேண்டிய நிலைமையிலிருக்கிறது. எதிர்க்கட்சியோ ஆட்சிக்குவந்தால் இதிலும் பார்க்க சிறந்த சேவையாற்றியிருக்கமுடியும் என்பதை நிரூபிப்பதில் கவனத்தை செலுத்தவேண்டியிருக்கிறது.

இந்தச் சான்றுகளின்படி இருகட்சிகளினதும் திறமைகள், திட்டங்கள் வாக்காளரின் மன நிலையை மாற்றக் கூடியதாயிருக்கும். எப்பக்கமும் சார்பில்லாத 33 சதவீதமானவரின் வாக்குகள் யார் பக்கம் விழப்போகிறதென்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

களைப்பற்றி உங்களுக்குப் பயம்தானா? என்று கேட்டேன். அவர் சிரித்து தலை அசைத்தார். நமது அன்பினால் விரோதிகளையும்கூட நண்பர்களாக்கி விடலாம். நம் உள்ளம் தூய்மையாக இருப்பின் எதிராளியின்

மலிவளம் சுரக்க, மன்னன் கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க, நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## வடக்கில் பாகுபாடுபற்றி விசாரிக்க கோருவர்

உடுப்பிட்டி, புதன்

‘‘சிறுபான்மைத் தமிழர்களின் உண்மையான நிலையைப் பற்றியும், மறுக்கப்பட்ட உரிமைகளைப் பற்றியும், சிறுபான்மைத் தமிழர்கள் மீது நடாத்தப்படும் அடக்குமுறைகள் பற்றியும் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவுக்கும் மற்றும் அமைச்சர்களுக்கும் எடுத்துக்கூறித் தகுந்த பரிகாரம் காணுவது’’ என்று அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைப் பொதுச்சபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்திற்கு அனுசரணையாகக் கல்வி - பொருளாதாரம் - நிலம் - உள்ளூராட்சி மன்றங்கள் - சங்கங்கள் முதலியவற்றில் சிறுபான்மைச் சமூகத்தவர்கள் மீது காட்டப்படும் பாகுபாடுகள் முதலிய விபரங்களைத் திரட்டிக் கூடிய சீக்கிரம் மகாசபைக்கு அனுப்பி வைக்குமாறு சகல மகாசபை உறுப்பினர்களும், சனசமூக நிலைய அங்கத்தவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளனர்.

பின்வரும் தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது.

இளவாலைக் கிராமத்திலே சிறுபான்மைத் தமிழ்க் கத்தோலிக்கருக்கு கலியாணச் சடங்குகளின் போது காலாகாலமாகத் தேவாலய ஆசன உரிமை மறுக்கப் பட்டு வந்தது கடந்த மாதம் கத்தோலிக்க மத அதிகாரிகள் இந்த உரிமையை அனுமதித்தனர். இதன் காரணமாக அக்கிராமத்துச் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு உயர் வகுப்பு கத்தோலிக்க மக்கள் பொருளாதார ரீதியில் இழைத்து வரும் வேறுபாடுகள் பற்றிப் பிரதமரும், பொலிஸ் அதிபரும் விசாரணை செய்து உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.’’.

— —

## காயமடைந்தவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம். புதன்

விடத்தற்பளையில் நடந்த ஒரு கோயில் திருவிழாவில் இரு கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் மிருசுவிலைச் சேர்ந்த சூசைப்பிள்ளை அரசரத்தினம் என்பவர் காயமடைந்தார். மயக்கமடைந்தநிலையில் இவர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறா.

இரு கோஷ்டிகளுக்கிடையே கைகலப்பை தவிர்க்கமுயன்றபோது இருவருக்கு காயமேற்பட்டதாக கூறப்படுகிறது இச்சம்பவம் சம்பந்தமாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. சாவகச்சேரி பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றார்கள்,

## நக்ஸல் பாரிகள்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரஸில் சேர்ந்து அதன் கரங்களைப் பலப்படுத்துமாறு வாலிபர்களுக்கும், அறிவாளிகளுக்கும் வேண்டுகோள் விடுவதென்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தீவிர இடதுசாரி, வலதுசாரிச் சக்திகளின் நடவடிக்கைகள் பற்றிப் பெரும் கவலை கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது: இக்கட்சிகளைத் தடைசெய்வது விரும்பப்படவில்லையென்றும் அதற்கு மாருகச் சமூக பொருளாதாரத்துறைகளில் இச்சக்திகளைத் தீவிரமாக எதிர்த்துப் போராடவேண்டுமென்றும் தீர்மானமொன்று கூறுகிறது.

## பெண்கள் ஆர்ப்பாட்டம்

வகுப்புவாத ஸ்தாபனங்கள் தடைசெய்யப்படவேண்டுமென்று காரியக் கமிட்டிக்கூட்டம் நடைபெற்ற இடத்தின் முன்பாகப் பெண்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி. திரு சவான் உட்படப் பலர் உரையாற்றினர்.

திரு. பக்தவத்சலம் மூன்றும் நாள் கூட்டத்தில் பேசுகையில் தமிழ்நாட்டில் வகுப்புவாதம் இல்லையென்றும், ஆயினும் விழிப்புடன் இருக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டா

## சங்காபிஷேகம்

திருக்கேதீச்சரம், செவ்வாய்

திருக்கேதீச்சர ஆலய மகா அஷ்டோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் இம்மாதம் 23ந் தேதி நடைபெறவிருக்கிறது.

அன்றைய தினம் விசேஷ பூசை, அபிஷேகம், கதாப் பிரசங்கம், அன்னதானம் ஆகியன நடைபெறும். போக்குவரத்து வசதிக்காக பல பாகங்களிலிருந்தும் விசேஷ பஸ் வண்டிகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன

— —

## ‘‘உபதபால் நிலையம் வேண்டும்’’

ஊர்காவற்றுறை, செவ்வாய்

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தில் உப. தபால்நிலையம் அமைக்கவேண்டிய அவசியம் பற்றி சர்வோதய அரசியல் முன்னணித் தலைவர் திரு. பி. கதிரவேலு ஜே. பி தபால் அமைச்சர் திரு. ஸி. குமாரசூரியரியிடம்பிரஸ்தாபித்துள்ளார்.

இப் பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதியில் 63-ம் இலக்க அவர்களது அச்சகத்தில்1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## வடக்கில் ராணுவக்காவலைப் பலப்படுத்த வேண்டுமாம்

### ராணுவத் தளபதி யோசனை

கோட்டை, திங்கள்

வடக்கு கரையோரப் பகுதிகளில் கள்ளக்கடத்தலையும் குடியேற்றத்தையும் தடுப்பதற்கு உறுதியான பாதுகாப்பு ஏற்படுத்தும் வகையில் காவல்படையை மேலும் பலப்படுத்தும்படி ராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சேப்பால ஆட்டிகலை அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்.

கள்ளக் கடத்தலைத்தடுப்பதற்கு இப்பொழுதுள்ள ஏற்பாடுகள் ஸ்திரமாக இல்லையென்று தெரிவதாக மேஜர் ஜெனரல் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலதிக சிப்பாய்களும், திறமான ரோந்து வள்ளங்களும், வானொலித்தொடர்பு சாதனங்களும் வடபகுதி காவல்படையினருக்குத் தேவைப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

1958-69 ஆண்டில் 55 லட்சம் ரூபாய் பெறுமதியான கள்ளக்கடத்தல் பொருட்களை ராணுவத்தினர் கைப்பற்றியிருப்பதாகவும் இதிலிருந்துகள்ளக்கடத்தல் எவ்வளவு தூரம் வசதியாக நடைபெறுகிறதுஎன்பது தெரிய வருகிறது என்றும் ராணுவ அதிகாரி ஒருவர் நிருபர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org